Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-14


தைப்பொங்கல் வரை 15% வீதம்
விசேட சேவைக் கழிவுடன்
உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
முள்ளைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-13511) விநாயகர் வீதி, மயிலிட்டி.

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை-20 | 05-12-2005 | திங்கட்கிழமை | ஓசை-291

## யாழ்.இல் பதற்ற நிலை அதிகரிப்பு

# குடாநாட்டில் பல்வேறு தாக்குதல்களில் 11 சிறிலங்கா இராணுவத்தினர் பலி!

## கோண்டாவிலில் மட்டும் கிளைமோரில் அறுவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடா நாட்டில் நேற்று இடம்பெற்ற பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் 11 சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்தனர். இதில் கோண்டாவிலில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் மட்டும் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நால்வர் படுகாயமடைந்தனர். காயமடைந்த படையினர் பலாலி இராணுவ மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு பின்னர் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.**

**கோண்டாவிலில் கிளைமோர்:**

யாழ்.கோண்டாவில் பகுதியில் இராணுவ உழவு இயந்திரம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் பலியாகியுள்ளதுடன் நான்கு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 1.00 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.யாழ்.நகரப்பகுதிகளில் இருந்து இராணுவத்தினரின் விநியோகப்பணிகளில் ஈடுபடுவதற்காக பலாலி நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த உழவு இயந்திரம் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.இதில் பயணம் செய்த ஆறு பேர் சம்பவ இடத்தி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நீர்வேலி, கோண்டாவிலிலிருந்து மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணத்தில் நீர்வேலி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இருந்தும் கோண்டாவில் பகுதிகளில் இருந்தும் மக்கள் இடம்பெயர்ந்து சென்றுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.நேற்று பகல் கோண்டாவிலிலும் மாலை நீர்வேலிப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தையடுத்து அங்கு படையினரின் கெடுபிடி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்தே மக்கள் இடம்பெயர்ந்து அயல் கிராமங்களுக்குச் சென்றுள்ளனர்.

## ஊரடங்குச் சட்டம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி,புத்தூர், சிறுப்பிட்டி, அச்சுவேலிப் பகுதிகளில் ஊரடங்குச்சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது. நேற்று மாலை 6.10 மணியளவில் நீர்வேலிப் பகுதியில் படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து,அங்கு படையினரால் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## சனாதிபதி-முப்படைத் தளபதிகள் நேற்று அவசர சந்திப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாண மற்றும் கிழக்கு மாகாண நிலைமைகள் தொடர்பில் நேற்று மாலை சனாதிபதி மகிந்தவுக்கும் முப்படைத் தளபதிகளுக்கும் இடை யில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன் போது நிலைமைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளதுடன் நிலைமைகளை கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறும் சனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

## மூன்று பொதுமக்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பகுதியில் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். கோண்டாவில் பகுதியில் நேற்று

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கோண்டாவில், நீர்வேலியில் பதற்றம்; படையினர் குவிக்கப்பட்டு தேடுதல்!

### *பொதுமக்கள் மீது தாக்குதல்,25 பேர் படையினரால் கைது*

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பகுதியில் நேற்று பெருமளவான படையினரும் பொலிசாரும் குவிக்கப்பட்டு சுற்றி வளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது. இச்சுற்றிவளைப்பின் போது 25 பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவுகின்றது.

மேலும் வீதியால் பயணித்தோர் மீது படையினர் கண்மூடித்தனமான துப்பாக்கிப்பிரயோகம் மற்றும் குண்டாந்தடியடி என்பவற்றை மேற்கொண்டனர்.

வீதியால் சென்ற இளைஞர் யுவதிகள் உட்பட கோண்டாவிலில் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அருகில் உள்ள வீடுகளில் தங்கியிருந்தவர்கள் கைது செய்யப்பட்டு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்தச் சம்பவம் பலாலி வீதியில் கோண்டா

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரின் தாக்குதல் தொடருமானால் மக்கள் இன்னுமின்னும் கிளர்ந்தெழுவார்கள்

### *- யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்*

(நமது நிருபர்)

மக்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தப்படுகின்ற சம்பவம் தொடருமேயானால் இன்னுமின்னும் மக்கள் கிளர்ந்தெழுவார்கள் என யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

தமிழீழ தேசிய தொலைக்காட்சிக்கு இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், நாங்கள் கண்காணிப்புக் குழுவினருக்கு இவ்வாறான சம்பவங்கள் அங்கு தொடர்ந்து கொண்டிருப்பதனால் மக்கள் இயல்பாக ஆத்திரமடைந்து கொதிப்படைகின்ற சூழ்நிலைகள் ஏற்படும் என்பதை தெரிவித்துள்ளோம்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இரு இளைஞர்கள் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக யாழ்.தாக்குதல்கள் இருக்கலாம்

### *சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம் நீர்வேலியில் இரு விவசாயிகள் கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கும் வகையில் யாழில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கக் கூடும் என்று சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் விதாரனகே தெரிவித்துள்ளார்.

யாழ். தாக்குதல்கள் தொடர்பாக சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் விதாரனகே நேற்று கூறியுள்ளதாவது:

சிறிலங்கா இராணுவத்தினருக்கு உழவு இயந்திரத்தில் உணவு எடுத்துச் செல்லப்பட்ட போது கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் ஆறு இராணுவத்தினர் இறந்துள்ளனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## படைத்தளபதியின் கோரிக்கையை இளம்பரிதி நிராகரித்தார்

(நமது நிருபர்)

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியைச் சந்திக்க யாழ்.மாவட்ட சிறிலங்கா படைத்தளபதி விடுத்த கோரிக்கையை இளம்பரிதி நிராகரித்துள்ளார்.

யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியை சந்திப்பதற்கு யாழ்.மாவட்ட சிறிலங்கா படைத்தளபதி போர் நிறுத்த கண்காணிப்புகுழு மூலம் கோரியிருந்தார். இதனை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி நிராகரித்துள்ளார்.

## யாழ்.நகரப்பகுதியில் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் அடையாள அட்டையின்றி நடமாடிய பலர் நேற்றிரவு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு ஐம்பதிற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(28)

## திருமலை மூதூரில் வெட்டுக்காயங்களுடன் முஸ்லிம்கள் மூவரது சடலங்கள் மீட்பு

(திருமலை)

திருமலை மூதூரில் வெட்டிக்கொலை செய்யப்பட்ட நிலையில் மூவரது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.இந்த மூவரும் முஸ்லிம்கள் என தெரிவிக்கப்படுகிறது சடலங்கள் இறால் குழிப்பகுதியில் பாழடைந்த கிணறொன்றிலிருந்து கண்டெடுக்கப் பட்டுள்ளன.இதே வேளை திருமலை மூதூரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்ததுடன் கத்தி வெட்டுக்கு இலக்காகி இருவர் பலியாகி இருந்தனர்.

இதனைத் தொடர்ந்தே நேற்று இந்த மூன்று முஸ்லிம்களது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. (25)

## வரிவிளம்பரம்

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக்கொப்பி லெமினேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும், பிள்ளையார் பொத்தக சாலை, கண்டிவீதி, கிளிநொச்சி.

T.P.2285750 (சி.13263)

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

இலங்கை கணனிகள் சங்கத்தினால் நடாத்தப்படும் பரீட்சை

**Sri lankan Computer Driving Liecence**

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

தொடர்புகட்கு:

வின்நெற் கணனி பயிற்சி நிலையம், டிப்போ வீதி, கிளிநொச்சி

(சி.13074)


### தவறிவிட்டது

தாமோதரம் கிருஸ்ணகுமார் என்பவரது தேசிய அடையாள அட்டை, நிரந்தர பயண அனுமதி அட்டை சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் ஆவணங்கள் விசுவமடுவிற்கும் ஆனையிறவிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகிறீர்கள் சன்மானம் வழங்கப்படும். (7071)

### பசு மாடுகள் விற்பனைக்குண்டு

நல்லின பசுமாடுகள் ஆறு விற்பனைக்குண்டு. அவற்றை பெறவிரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி யோண் கல்வி நிலையம், முல்லைத்தீவு வீதி, புதுக்குடியிருப்பு. (6957)

# நீண்டகாலமாய் திருத்தப்படாதுள்ள நீர்ப்போக்கிகளால் போக்குவரத்து சிரமம்



(படம்:- சோதி)

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்னாலிருந்து உருத்திரபுரம் ஏழாம் வாய்க்கால் குருகுலம் சிறுவர் இல்லம் வரையிலான வீதிகளும் வீதியில் அமைக்கப் பெற்ற நீர்ப் போக்கிகள், பாலம் என்பன கடந்த பல மாதங்களாக சேதமடைந்துள்ளதன் காரணமாக அப்பகுதியூடாக பயணிப்பவர்கள் பலத்த சிரமங்களுக்கு மத்தியிலேயே போக்கு வரத்துக்களை மேற் கொண்டு வருகின்றனர்.

இவ் வீதியில் அமைந்துள்ள பெரிய பாலமொன்று பலத்தசேதங்களுக்குள்ளாகி பலமாதங்கள் கடந்த நிலையிலும் அதனை புனரமைப்பதற்கான பணிகள் இதுவரை மேற் கொள்ளாமையின் காரணமாக இவ்வீதியூடான வாகனப் போக்குவரத்துக்களை மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது.

மேற்படி பாலத்திற்கான புனரமைப்புப் பணிகளை சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் உடனடியாக மேற் கொண்டு இப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவலத்தினை நிவர்த்தி செய்ய முன்வரவேண்டுமென கேட்கின்றனர் (சோ, தீ)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கும் பள்ளிக்குடா அ.த.க. பாடசாலை



(படம்:- சதீ)

(அலுவலக செய்தியாளர்)

அடிப்படை வசதிளற்ற நிலையில் பள்ளிக்குடா அ.த.க.பாடசாலை இயங்கிவருவதால் தமது பிள்ளைகள் சீரான கற்றல் நடவடிக்கையில் ஈடுபடமுடியாதுள்ளனரென பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

பள்ளிக்குடா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையானது தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரையான வகுப்புக்களைக் கொண்டு இயங்கி வருகின்றது. இருப்பினும் இங்கு சீரான ஒரு கட்டடவசதியும் இல்லை. தற்போது பெரும் இடிபாடுகளுக்குள்ளான தற்காலிகக் கொட்டகையிலேயே வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாகவும் தற்போதைய மழையினாலும் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதோடு பாடசாலை வளாகத்திலும் மழைநீர் தேங்கி நிற்பதால் மாணவர்கள் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது எனப் பெற்றோர் கவலை தெரிவிப்பதோடு, சம்பந்தப்பட்டவர்கள் தமது பிள்ளைகளின் கற்றல் திறனை ஊக்கப்படுத்த தகுந்த நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டுமெனவும் கேட்டுள்ளனர். (ச)

# மீன்பிடி உபகரணங்களை கொள்வனவு செய்து தொழிலை விருத்தி செய்ய முடியாதநிலையில் எமது மீனவர்

## பள்ளிக்குடா க.தொ.கூ சங்கத் தலைவர் தகவல்

(அலுவலக செய்தியாளர்)

மீன்பிடிக்கு அவசியமான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான பொருளாதார வசதியின்றி பூநகரி பள்ளிக்குடா மீனவர்கள் பெரும் கஸ்ரநிலையை எதிர் நோக்கி வருகின்றனர்.

இவ்வாறு அப்பகுதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தெரிவிக்கின்றார், இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

பள்ளிக்குடா கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 230 வரையான அங்கத்தவர்கள் உள்ளனர். இவர்கள் சாதாரண வெளியிணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட மிகக்குறைவான படகுகளிலேயே தொழிலை மேற் கொண்டு வருகின்றனர். ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான எந்தவொரு வசதிகளும் இங்கு இல்லை. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுள்ளோம். ஆனால் சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

அத்தோடு இங்குள்ள மீனவர்களின் வருமானம் அவர்களின் அன்றாட வாழ்க்கைத் தேவையை நிவர்த்தி செய்யக்கூடியதாக மட்டுமே உள்ளது. ஏனெனில் இவர்கள் இறால், மீன் கொள்வனவாளர்களிடம் கடன்களைப் பெற்றே தொழில் உபகரணங்களை கொள்வனவு செய்து தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் 90 விழுக்காடு கடன்பட்டு தொழில் செய்வதால் வருமானம் கடனை மீளச் செலுத்துவதிலேயே போய் விடுகிறது இதனால் சேமிப்பு இல்லாததால் தொழிலை மேலும் விருத்தி செய்ய முடியாதுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கருத்தில் கொண்டு இப் பகுதி மீனவர்களுக்கு உதவிகளை வழங்க முன்வருவார்களேயானால் தொழிலை மேலும் விருத்தி செய்ய முடியும் என்றார் அவர் (ச)

# வீதிகளில் படுத்துறங்கும் கட்டாக்காலிகள்; போக்குவரத்து பயணிகளிற்கு இடையூறு

(அலுவலக செய்தியாளர்)

இரவு வேளைகளில் கட்டாக் காலி கால்நடைகள் பிரதான வீதிகளில் படுத்துறங்குவதன் காரணமாக அவ் வீதிகளில் பயணிக்கும் வாகன ஓட்டிகள் முதல் பாதசாரிகள் வரை தினந் தினம் பலத்த அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதாகத் தெரியவந்துள்ளது. குறிப்பாக இரணைமடுச் சந்தியிலிருந்து கரடிப்போக்குச் சந்திவரையுள்ள ஏ9 பிரதான வீதியிலும் கிளிநொச்சி டிப்போச்சந்தியிலிருந்து புதுமுறிப்பு சந்திவரையுமுள்ள வீதியிலும் மேற்படி கட்டாக்காலி மாடுகள் கூட்டங்கூட்டமாக இரவு வேளைகளில் படுத்துறங்குவதன் காரணமாக இவ் வீதியால் பயணிக்கும் சகலரும் தினந்தினம் பலத்த அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதுடன் இவை வீதி விபத்துக்களும் ஏற்படக் காரணமாக அமைந்துள்ளமை குறிப்பிட வேண்டிய தொன்றாகும். மேற்படி கட்டாக்காலி கால் நடைகளை கால்நடைகளின் உரிமையாளர்கள் கட்டி வளர்க்காதவிடத்து சம்பந்தப்பட்ட திணைக்களம் மற்றும் நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் உடன் நடவடிக்கை மேற்கொண்டு மேற்படி அவலத்தினை நீக்க முன்வரவேண்டுமென சகல தரப்பினரும் வேண்டுகை விடுத்துள்ளனர்.(சோ)

### தமிழீழ மாவட்ட நீதிமன்று-ஜெயபுரம்

****************************************

வழ/இல:-126/05

தன்மை:-மணநீக்கம்

அருளானந்தம் அருள்சிங்கம்,
குமுழமுனை,பல்லவராயன்கட்டு,
பூநகரி.

[வழக்காளி]

எதிர்:-

அருள்சிங்கம் தங்கமலர்,
அராலிவிழக்கு,
யாழ்ப்பாணம்.

[எதிராளி]

## பகிரங்க அறிவித்தல்

மேற்படி வழக்கில் எதிராளியாகிய நீர் இவ்வழக்கின் வழக்கறிக்கை, அழைப்பாணை என்பவற்றைப் பெற்று மன்றுக்குச் சமுகம் கொடுக்காது இருப்பதால் மன்றில் மாவட்ட நீதியாளர், திரு.சி. கோவலன் அவர்கள் 01.12.2005 அன்று வழங்கிய கட்டளையின் பிரகாரம் எதிராளி இம்மன்றில் தோன்றுமாறு பகிரங்க அறிவித்தல் விடப்படுகிறது. எதிராளியாகிய நீரோ அல்லது உமது நிலையில் அக்கறையுடையோரோ மன்றில் தோன்றத் தவறின் இவ்வழக்கு வழக்காளியின் கோரிக்கைக்கு அமைய ஒருமுக நடவடிக்கைக்கு விடப்பட்டு தீர்ப்பு வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

மன்றின் கட்டளைப்படி

வரைந்தவர்:-
திரு.இரா.சரவணபவானந்தன்,
வழக்காளி சட்டத்தரணி,
பூநகரி, கிளிநொச்சி.

சி.எச்.திருக்குமார்
பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
மன்னார், ஜெயபுரம்

(சி.13433)

## சாவு அறிவித்தல்

### குணபாலசிங்கம் ஈஸ்வரி

தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், புதுக்குடியிருப்பு 1 ஆம் வட்டாரத்தை தற்காலிக முகவரியாகவும் கொண்ட ஈஸ்வரி குணபால சிங்கம் 04.12.2005 அன்று தாவடியில் காலமானார். அன்னார் குணபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், பாஸ்கரன், பாலேந்திரன் (பாலேந்தி), பகீரதன் (பகீ), (செம்பிறை கடைச்சல் தொழிலக உரிமையாளர்), மற்றும் ஜெயசுதா(சுதா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் 06.12.2005 இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 12.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல்:-
பிள்ளைகள்-பாலேந்தி,பகீ
(செம்பிறை கடைச்சல் தொழிலகம்)

(சி.13428)

### பற்சிகிச்சை

மல்லாவி பிரதேசத்திற்குட்பட்ட கோட்டைகட்டிப்பாடசாலையில் இன்று தமிழீழ சுகாதாரசேவையினரின் ஒழுங்குபடுத்தலிலும், நலவாழ்வு அபிவிருத்திநிறுவன அனுசரணையுடனும் பற்சுகாதாரம், வாய்ப்புற்று நோய் சம்பந்தமான கருத்தரங்குகளும், பற்சிகிச்சையும் நடைபெறவுள்ளதாக தமிழீழ சுகாதார சேவையினர் அறிவித்துள்ளனர். (தீ)

### குடிநீர் வழங்க ஏற்பாடு

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையினரால் கிளிநொச்சி, பரந்தன் பிரதேசங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிளிநொச்சியிலிருந்து பரந்தன் வரையான பகுதிகளுக்கு நீர்வழங்குவதற்கான குழாய்கள் அமைப்பதற்கான முன்னோடி நடவடிக்கைகள் நேற்றைய தினம் மேற்படி சபையினரால் ஆரம்பிக்கப்பெற்று நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது (சோ,தீ)



கிறிஸ்மஸ் பண்டிகை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இதையொட்டி ஜேர்மனியின் பிராங்க்பர்ட் நகரில் கிறிஸ்மஸ் சந்தை ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இந்தச்சந்தை இரவு நேரம் மின் விளக் குகளின் அலங்காரத்தில் ஜொலிக்கிறது .

# இத்தாலியில் பனிப்பொழிவு, மழை இயல்புநிலை ஸ்தம்பிதம்


(றோம்)

இத்தாலியில் ஏற்பட்டுள்ள மழை மற்றும் பனிப்பொழிவு காரணமாக அங்கு இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாலியின் முக்கிய நகர்களான வெனிஸ், லகூர் போன்றவை அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன. வீதிகள் அனைத்தும் பனிமூடிக்காணப்படுவதால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

சில இடங்களில் வாகனங்கள் பனிக்கட்டிகளில் அகப்பட்டுக் காணப்படுவதால் அவற்றை அங்கிருந்து மீட்கும் நடவடிக்கைகளில் வாகன உரிமையாளர்களுடன் பொலிசாரும் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக அப்பகுதிகளில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



அமெரிக்காவின் வோஷிங்டன் நகரில் உள்ள ஸ்மித்சோனியன் தேசிய விலங்கியல் பூங்காவில் இலைமெத்தையின் மீது ஓய் வெடுத்துக்கொண்டிருக்கின்றன நான்கு குட்டிச்சிறுத்தைகள். சற்றுத்தள்ளி அமர்ந்து கொண்டு குட்டிகளைக் கண்காணிக்கின்றது தாய்ச் சிறுத்தை.

## பிணைக்கைதிகளை விடுவிக்க கோரிக்கை

(பாக்தாக்)

ஈராக்கில் பிணைக்கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டுள்ள மேற்கத்தைய நாடுகளைச் சேர்ந்தவர்களை விடுதலை செய்யுமாறு. ஈராக்கின் முக்கிய அரசியல் கட்சிகளில் ஒன்றான ஈராக்கிய இஸ்லாமியக் கட்சி அழைப்புவிடுத்துள்ளது.

இஸ்லாமிய மதத்தின் மதிப்புக்களை இது போன்ற கடத்தல்கள் இழிவுபடுத்துவதாக அமைந்துள்ளதாக அக்கட்சி கூறியுள்ளது. பிரிட்டிஷ் இஸ்லாமிய மூத்ததலைவர், அவர்களின் விடுதலைக்கான பேச்சுவார்த்தை முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

# தீவிரவாதிகளின் தாக்குதலில் 19 ஈராக் இராணுவத்தினர் பலி

[பாக்தாத்]

**ஈராக்கில் தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்கியதில் ஈராக்கியப்படையினர் 19பேர் உயிரிழந்துள்ளனர். ஈராக்கின் வடபகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த போதே இந்தத்தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.**

இதேவேளை ஈராக்கின் பலூஜாப் பகுதியில் இடம்பெற்ற மற்றுமொரு குண்டுத்தாக்குதலில் அமெரிக்க இராணுவத்தினர் பத்துப்பேர் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பலூஜாவில் நடத்தப்பட்ட இத்தாக்குதல் சம்பவம் தொடர்பான காட்சிகளை ஈராக்கின் ஆயுதக்குழுவொன்று இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அமெரிக்கப்படையினரின் வாகனம் மெதுவாகச் சென்றுகொண்டிருந்த போது தாக்குதல் நடத்தப்பட்ட காட்சிகள் இங்கு காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 12 ஆயிரம் ஈராக்கிய சிறைக்கைதிகளை இம்மாதம் எட்டாம் திகதிக்கு முன்னர் விடுதலை செய்யாவிட்டால் பிணைக்கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ள நான்கு பேரையும் கொலை செய்து விடுவதாக அல்ஹைதா இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சீன அரசாங்கம் சுரங்கங்களை குறைக்கத்திட்டம்

(பீஜிங்)

சீனா அடுத்த மூன்று வருடங்களில் ஆண்டொன்றுக்கு நான்காயிரம் சிறுகரிச்சுரங்கங்களை மூடிவிடவுள்ளது.

கடந்த மாதம் 27ஆம் திகதி 769 சுரங்கத்தொழிலாளர்களைப்பலி கொண்ட பாரிய கரிச்சுரங்க வெடிவிபத்து இடம் பெற்ற டொங்சிங் கரிச்சுரங்கத்தில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் கரிச்சுரங்கபாதுகாப்பிற்கான அரசாங்க நிர்வாகப்பிரிவின் தலைவர் இந்த சுரங்கமூடு விழா பற்றித் தெரிவித்தார்.

ஆகக்கூடியது சுமார் பத்தாயிரம் கரிச்சரங்கங்களையே தொடர்ந்து வைத்திருக்க முடியும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இரண்டு வருடங்களுக்குள் கரிச்சுரங்க விபத்துக்களைக் குறைப்பதற்கு பெரிதும் முயற்சி எடுப்பதாக அவர் உறுதியளித்தார். தற்போது சீனாவில் 24ஆயிரம் கரிச்சுரங்கங்கள் இயங்கி வருகின்றன.



அமெரிக்காவின் ஜோர்ஜியா மாநிலத்தில் உலகிலேயே மிகப்பெரிய மீன் கண்காட்சியகம் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளது. கண்காட்சியகத்தில் சுறா ஒன்று நீந்துவதை அச்சத்துடன் பார்வையிடும் பார்வையாளர்.

# சுரங்கத்துக்குள் வெள்ளம் புகுந்ததால் சீனாவில் 16 பேர் பலியாகினர்

(பீஜிங்)

மத்திய சீனாவிலுள்ள நிலக்கரிச் சுரங்கமொன்றில் வெள்ளம் புகுந்ததன் காரணமாக 16 பேர் உயிரிழந்துடன், 42 பேர் சுரங்கத்தினுள் சிக்கியுமுள்ளன ரென்றும் சீன அரச வானொலி தெரிவித்துள்ளது

மீட்புப் பணியாளர்கள் புதையுண்டவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மத்திய மாகாணத்திலுள்ள ஹூனான் பிரதேசத்தில் அமைந்துள்ள ஷிப்போ எனும் நிலக்கரிச் சுரங்கத்தில் கடந்த வெள்ளி இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

வெள்ளம் ஏற்பட்டதற்கான காரணம் இன்னமும் கண்டறியப்படவில்லை என்று சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உலகிலேயே சீனாவில் அதிக சுரங்க விபத்துக்கள் இடம்பெறுவது வழக்கம்.

கடந்த வருடம் ஆறாயிரம் சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் இந்த வருடம் இதுவரை மூவாயிரம் பேர் சுரங்க விபத்துக்களில் உயிரிழந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



சீனாவில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு வருவதால் நீரைச்சேமிக்க பெரிய வாளிகளை வாங்குகிறார் இந்தப் பெண்.

# கஜகஸ்தான் தேர்தல் முடிவுகள் இன்று தற்போதைய சனாதிபதியே வெல்வார் என ஆருடம்

கஜகஸ்தான் மக்கள் நேற்று சனாதிபதித்தேர்தலில் வாக்களித்துள்ளனர்.

சனாதிபதி நூர்சுல்தான் நஷார்பஜேப் இத் தேர்தலில் மீண்டும் ஏழு வருட காலப்பதவிக்குத் தெரிவு செய்யப்படலாம் என பரவலாக நம்பப்படுகின்றது.

கஜகஸ்தான் சுதந்திரம் அடைந்ததிலிருந்து தெற்காசிய நாடான இந்தக்குடியரசிற்கு நஷார்பஜேப் தலைமை தாங்கி வருகிறார். பிரதான எதிர்க்கட்சி வேட்பாளரும், முன்னாள் ஆளும்கட்சி உறுப்பினருமான சர்மகான்துஜார்பாய் உட்பட மேலும் நான்கு பேர் இத்தேர்தலில் போட்டியிட்டனர்.

கஜகஸ்தானில் இதற்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்கள் நீதியாகவோ நேர்மையாகவோ நடைபெறவில்லை என்று சர்வதேச அவதானிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இத்தேர்தலின் முடிவுகள் இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு ஒரு வேட்பாளர். முதல் சுற்றிலேயே 50 வீதத்திற்கும் அதிகமான வாக்கு களைப் பெற்றாக வேண்டும்.

அமெரிக்காவில் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள இன்ரமீடியா என்ற அமைப்பு நடத்திய அபிப்பிராய வாக்கெடுப்பில் தற்போதைய சனாதிபதி நஷார்பஜேப் 71 சதவீத வாக்கு களைப்பெறுவார் என்றும் இவரை எதிர்த்துப் போட்டியிடுபவர்களில் எவருமே இரண்டு சதவீதமான வாக்குகளையேனும் பெறமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஜெருசெலேமிற்கு பாப்பரசரை அழைக்கிறார் பலஸ்தீன தலைவர் மகமூட் அப்பாஸ்

(ஜெருசெலேம்)

பாப்பரசர் ஜெருசெலேமிற்கு விஜயம் செய்து அங்குள்ள கிறிஸ்தவ மக்களுக்கு ஆசி வழங்க வேண்டுமென பலஸ்தீனத்தலைவர் மகமூட்அப்பாஸ் அழைப்பு விடுத்துள்ளார். சனாதிபதி அப்பாஸ் முதற்தடவையாக வத்திக்கானின் பாப்பரசர் 16ஆவது ஆசிர்வாதப்பரை சந்தித்து விடுத்த இந்த வேண்டுகோளைப் பாப்பரசர் ஏற்றுக்கொண்டுள்ளார்.பாப்பரசரின் ஜெருசெலேம் விஜயத்திற்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. இஸ்ரேலிய-பலஸ்தீன உறவுகளில் ஜெருசெலேம் ஒரு நெருக்கடியான கட்டத்தை வகிக்கிறது.

ஜெருசெலேம்நகரின் கிழக்குப்பகுதியை உள்ளடக்கியதாக எதிர்கால பலஸ்தீன ராஜ்ஜியம் அமைய வேண்டும் என பலஸ்தீனியர்கள் விரும்புகிறார்கள்.

இஸ்ரேலிய சனாதிபதி கடந்த மாதம் பாப்பரசரை சந்தித்தபோது யூதநாடான இஸ்ரேலுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



1984 ஆம் ஆண்டு ஒதியமலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் 21 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு படுகொலையான மக்களின் நினைவிடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் தேசியக் கொடியேற்றி நிகழ்வு ஆரம்பிக்கப்படுவதையும், மக்கள் மலர் வணக்கம் செலுத்துவதையும் படங்களில் காண்க.

# படையினரின் சோதனை நடவழக்கையால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிப்பு

## —பாதிக்கப்பட்ட மாணவர் நிதியம் சிறிலங்கா சனாதிபதிக்கு மகஜர்

(திருமலை)

**திருகோணமலை நகரில் கடந்த சில நாட்களாகப் படையினரின் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் அரச அலுவலகங்களுக்குச் செல்லும் ஊழியர்கள் துன்பங்களுக்கு ஆளாவதாகவும் திருகோணமலை மாவட்ட பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியம் முறையிட்டுள்ளது.**

இதுதொடர்பான முறைப்பாட்டு மனுவை நிதியத்தின் நிறுவனத் தலைவர் கனகசபை தேவகடாட்சம் தொலைநகல் மூலம் சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்தார். அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

2002 பெப்ரவரியில் யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டதை அடுத்து படையினர் வாகனங்களை மறித்து பயணிகளைச் சோதனையிடுவதும் அவர்கள் எடுத்துச் செல்லும் பொருட்களை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்துப் பார்ப்பதும் சில காலமாக நிறுத்தப்பட்டிருந்தது. இச்சோதனை நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கியுள்ளன. புதிய சனாதிபதி பதவியேற்ற பின்னர் திருகோணமலை உவர் மலைப்பகுதியின் மத்திய வீதியில் நான்கு புதிய இராணுவ காவல் நிலைகள் நிறுவப்பட்டுள்ளன.

முகாம்களைத் தாண்டிச் செல்லும் வாகனங்கள், பயணிகள் மற்றும் பொதிகள் படையினரின் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

திருகோணமலை உட்துறைமுக வீதியில் இந்து கலாச்சார மண்டபத்திற்கு முன்பாக அனைத்துப் பேருந்துகளும் படையினரால் நிறுத்தப்பட்டு பயணிகள் இறக்கப்பட்டு ஒவ்வொருவராக நுணுக்கமாக சோதனையிடப்பட்ட பின்னரே பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படுகின்றனர்.

இதனால் பாடசாலை மாணவர்கள் நேரத்திற்கு வகுப்புக்களுக்குச் செல்ல முடியாத நிலையுள்ளதுடன் அவர்கள் உளவியல் ரீதியிலான பாதிப்பிற்கும் ஆளாகின்றனர். இந்தத் துன்பங்களை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம் என்று அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவின் பிரதி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்டத்தலைமைக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

# தியாகி திலீபன் மருத்துவமனை நிரந்தரமாக இயங்க ஆரம்பம்

மன்னார் கருங்கண்டல் கிராமத்தில் திலீபன் மருத்துவமனை நிரந்தரமாக இயங்க ஆரம்பித்துள்ளது.

இக் கிராமத்தில் முன்பு இம் மருத்துவமனை தற்காலிகமாகவே இயங்கி வந்தது. இதன் நிரந்தர சேவையின் காரணமாக கீரிசுட்டான், முள்ளிக்குளம், வலயன் கட்டு, பரிசன்குளம் ஆகிய கிராமங்களிலுள்ள பெருமளவு மக்கள் நன்மையடையவுள்ளனர்.

கடந்த 26ஆம் திகதி முதற் கொண்டு இவ் வைத்தியசாலை நிரந்தரமாக செயற்படத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# மதகுகள் அமைக்கப்படாமையால் புனரமைக்கப்பட்ட வீதிகள் சேதம்


(மடு)

மன்னார் மாவட்டத்திலுள்ள மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழுள்ள கிராமங்களில் பாலம்பிட்டியிலிருந்து வலயன்கட்டுக்கு செல்லும் வீதிகளில் மதகுகள் இல்லாத காரணத்தால் அண்மையில் கிரவல் கொண்டு புனரமைக்கப்பட்ட வீதிகள் பெரும் சேதமடைந்து வருகின்றன.

வெள்ள நீர் கிரவல் வீதிக்கு மேலால் பாய்ந்து செல்வதோடு வீதிகள் அரிப்புக்குள்ளாகி கிரவல் அள்ளிச் செல்லப்படுவதோடு வீதிகள் போக்குவரத்துக்கு உதவாத நிலையில் குன்றும் குழியுமாக மாறி வருகிறது.

இதன் காரணமாக மதகுகள் அமைக்கப்பட்டு வீதிகள் திருத்தியமைக்கப்பட வேண்டும் எனவும் மக்கள் கேட்டுள்ளனர். (40)

# வெள்ளத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு போரூட் உதவி



(வட்டக்கச்சி)

கிளி. கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் வெள்ளப் பெருக்கால் பாதிப்புற்ற மக்களுக்கு போரூட் நிறுவனத்தினரால் உணவல்லாத பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில் வெள்ளதால் பாதிப்புற்ற மாவடிக் கிராமத்தில் 250குடும்பங்களுக்கு உணவல்லாத பொருட்களான கூரைவிரிப்பு (தறப்பாள்), பாய், நுளம்புவலை, பெற்சீற், நிலவிரிப்பு, துவாய், சவர்க்காரம் போன்றவற்றை போரூட் வெளிக்கள இணைப்பாளர் தி.சிவகரன் வழங்கி வைத்தார். அத்தோடு கனமழையின்போது பாதிப்புற்ற மக்களுக்கு இந்நிறுவனம் சமைத்த உணவையும். வழங்கியதும் குறிப்பிடத்தக்கது. (12)

# கிளி.நகரையண்டிய திருவையாறு மின்சாரம் வழங்கலில் புறக்கணிப்பு

## — விரைந்து நடவடிக்கையெடுக்க மக்கள் வலியுறுத்து

(நமது செய்தியாளர்)

கிளிநொச்சி நகரை அண்டிய அயல் கிராமமான திருவையாறு பகுதிக்கு இதுவரையும் மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் கவலை அடைந்துள்ளனர்.

யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டம் தற்போது அபிவிருத்தி பெற்று வரும் நிலையில் இங்கு மின்சார விநியோகமும் கிராமம் கிராமமாக துரிதப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் திருவையாறு பகுதிக்கான மின்சார விநியோகம் அடிப்படை தேவையாக இருக்கின்ற போதும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதது மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 16 வருடங்களிற்கு முன்னர் இப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருந்ததாக சுட்டிக் காட்டும் இப்பகுதி மக்கள் இதனால் விவசாயத்தில் மக்கள் முன்மாதிரியாகத் திகழ்ந்ததுடன் பொருளாதார ரீதியிலும் முன்னேற்றம் அடைந்திருந்ததாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக கிளிநொச்சி நகரிலும் அதனை சூழவுள்ள பகுதிகளுக்கும் மின்சார விநியோகம் 24 மணித்தியாலயத்துக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில் திருவையாறு பகுதிக்கு மின்சார விநியோகம் கிடைப்ப தற்கு சம்பந்தப்பட்டவர்கள் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப் பகுதி மக்கள் வினயமாக வேண்டி நிற்கின்றனர்.

# மாசாரில் புதிதாக அமைக்கப்பட்ட பாலம் கடும் மழையால் சேதம்

(வடமராட்சி கிழக்கு)

இந்த வருடம் முற்பகுதியில் யூனிசெப் நிதிஉதவியுடன் மாசார் பகுதியில் அமைக்கப்பட்ட பாலம் கடும் மழை காரணமாக முற்றாக வாகனப் போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு சேதம் அடைந்துள்ளது.

இந்தப் பாலம் கட்டும் போதே அந்த ஊர் மக்களால் இந்த முறையில் இப் பாலம் செய்தால் இது தாக்குப் பிடிக்காது என்று தெரியப்படுத்தியும் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. குறித்த வாய்க்காலில் அதிகளவான நீர்பாய்வதால் அரிப்பெடுக்கும் என்று தெரியப்படுத்தினார்கள். அதையும் பொருட்படுத்தாமல் செய்த பாலம் முற்றாக வாகனப் போக்குவரத்து செய்ய முடியாமல் உள்ளது. இந்த வழியில் தான் மாசார் பாடசாலையும் உள்ளது. இதனால் ஆசிரியர்கள் மாணவர்கள் கூட பெரும் சிரமத்தின் மத்தியில் தான் செல்கின்றனர். இந்தப் பாலத்தினை உடனடியாக பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபரும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை செயலாளரும் சென்று பார்வை யிட்டுள்ளனர். (11)



சர்வதேச வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி வெண்புறா நிறுவனத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன. நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வின் பதிவுகள். (படம்-பிரதீபன்)

# மக்கள் மீதான தாக்குதலை நிறுத்தாவிடில் ஆயுதம் ஏந்தும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்

- கோப்பாய் பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

**சிறிலங்கா இராணுவமே! தமிழ் தேச விரோதிகளே! உங்களின் அராஜகத்தை உடனடியாக நிறுத்தாவிட்டால் மக்கள் திரண்டெழுந்து உங்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்பதையும் இதற்காக எமது விடுதலைப் போராட்டத்தின் உந்து சக்தியாக உள்ள மக்கள் படைக்கட்டுமானம் தகுந்த பதிலடி கொடுக்கும் என்பதை தங்களுக்கு புரியவைக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை என கோப்பாய் பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழர் தாயகப் பகுதிகளில் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தி நிலைகொண்டிருக்கும் சிங்கள அரச படைகளினதும் அவர்களுடன் ஒட்டிக்கொண்டு இருக்கும் தேசவிரோத கும்பல்களினதும் அடாவடித்தனங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. தமிழ் மண் பற்றாளர்களையும் ஆதரவாளர்களையும் எழுச்சி நிகழ்வுகளில் முன்நின்று செயற்படுபவர்களையும் கல்விமான்களையும் தமிழ் மண் மீது பற்றுக்கொண்டு போராட்டத்துக்கு உந்து சக்தியாக விளங்கும் பொது மக்களையும் இலக்கு வைத்து மிகக் கொடூரமான தாக்குதல்களை அண்மைக் காலங்களில் அரங்கேற்றி வருகின்றது. இதன் ஒரு கட்டமாக அண்மையில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வின் போது நீர்வேலிப் பகுதியில் அலங்கார வேலைகளை முன்னின்று மேற்கொண்ட இளைஞர் ஒருவர் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினராலும் அதனுடன் சேர்ந்து இயங்கும் தமிழ் தேச விரோத கும்பல்களினாலும் சுடப்பட்டு படுகாயமடைந்தது பலரும் அறிந்த விடயம். மீண்டும் இவர்கள் தமது அராஜகத்தை தொடர்ந்த வண்ணம் உள்ளார்கள். 01.12.2005 அன்று நீர்வேலிப் பகுதியில் தமது அன்றாட கடமைகள் தொடர் பாக நண்பர்களுடன் உரையாடிக்கொண்டு இருந்த அப்பாவி இளைஞர்கள் மீது சிறிலங்கா கூலிப்படையினரும் அவர்களுடன் சேர்ந்த தமிழ் தேச விரோத கும்பல்களும் இணைந்து மிகவும் மிலேச்சத்தனமாக துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலை நடத்தினார்கள். இதில் இரண்டு இளைஞர்கள் அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமானார்கள். இன்னொருவர் படுகாயமடைந்துள்ளார். இவ்வாறான தாக்குதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் தமிழ் மக்கள் போராட்டத்தினால் ஈர்க்கப்படுவதைத் தடுக்கலாம் என்றும் தமிழ் மக்களை அடிமைப்படுத்தி தமிழர் தாயக விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடலாம் என்றும் சிறிலங்கா அரசாங்கம் நப்பாசை கொண்டுள்ளது. இந்த அற்ப ஆசை ஒருபோதும் நிறைவேறமாட்டாது என்பதை எதிரியானவனுக்குச் சொல்லி வைக்க விரும்புகின்றோம். சிறிலங்கா அரசே சிறிலங்கா கூலிப்படைகளே தமிழ் தேசவிரோதக்குழுக்களே இது நாம் உங்களுக்கு விடும் எச்சரிக்கையாக அமையட்டும். இவ்வாறான அடாவடித்தனங்களை தொடர்ந்து அரங்கேற்றுவீர்களானால் விளைவுகள் விபரீதமாக அமையும் புரிந்துணர்வு ஒப்பந்த உடன்படிக்கையின்படி தமிழர் தாயக பிரதேசங்களில் நிலை கொண்டுள்ள ஆக்கிரமிப்பு இராணுவத்தினர் படிப்படியாக வெளியேற வேண்டும். மாறாக சிறிலங்கா இராணுவத்தினர் புதிய முகாங்களையும் காப்பரண்களையும் அமைத்து பொதுமக்களின் அன்றாட வாழ்விற்கு குந்தகம் விளைவித்து வருகின்றனர். ஒரு இனத்தின் விடுதலைப் போராட்டம் அந்த இனத்தின் மக்களின் கைகளில் தான் தங்கியுள்ளது. மக்கள் சக்தி மாபெரும் சக்தியாக உள்ளது என்பதை புரிந்துகொள்ளுங்கள். சிறிலங்கா இராணுவமே தமிழ் தேச விரோதக் குழுக்களே உங்களின் அராஜகத்தை உடனடியாக நிறுத்தாவிட்டால் மக்கள் திரண்டெழுந்து உங்களுக்கு எதிராக கைகளில் ஆயுதம் ஏந்தும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்பதையும் இதற்காக எமது விடுதலைப் போராட்டத்தின் உந்து சக்தியாக உள்ள மக்கள் படைக்கட்டு மானம் தங்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கும் என்பதை தங்களுக்கு புரியவைக்கும் காலம் வெகு தூரமில்லை எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சனாதிபதியின் பொதுத் தேர்தலுக்கான நகர்வு ஜே.வி.பி கடும் எதிர்ப்புத் தெரிவிப்பு

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தல் வெற்றிக்கு பின்னான சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் திடீர் பொதுத்தேர்தலிற்கான நகர்வை ஜே.வி.பி யினர் கடுமையாக எதிர்த்துள்ளனர். கூட்டணிக் கட்சிகள் திடீர் பொதுத்தேர்தல் அவசியமில்லை என அறிவுறுத்தியிருந்தன. ஜே.வி.பி யினர் அடுத்த வருட முற்பகுதியில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த கடுமையாக விவாதித்து வந்தனர். இது ஜே.வி.பி யினர் உள்ளூராட்சித் தேர்தலில் ஆர்வமாயுள்ளதை எடுத்துக்காட்டுகிறது. இதில் வெற்றிபெற்றால் ராஜபக்ஷவின் ஆணையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிர்வாகமும் பலப்படும். தற்போதைய நிலைமைகளில் உள்ளூராட்சி அமைப்புக்களின் பெரும்பான்மைப் பலத்தை ஐ.தே.க தனது கட்டுப்பாட்டினுள் வைத்துள்ளது. எனவே தற்போதைய சந்தர்ப்பத்தில் பொதுத்தேர்தல் முக்கியமில்லை என ஜே.வி.பி வாதிப்பதுடன் உள்ளூராட்சி அமைப்புக்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதன் மூலம் பாராளுமன்றத் தேர்தலிற்கு பலத்தைச் சேர்க்க முடியும் என வாதிட்டு வருகின்றது. இதன்படி ஆளும் கட்சிக்கு அரசியல் நிலைமைகள் சாதகமாய் அமைந்தால் அடுத்த வருட மத்தியில் பொதுத் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அம்பாறையில் மாற்றுக்குழு முகாம்; படைத் தரப்பு தெரிவிப்பு

(அம்பாறை)

அம்பாறை தமனை சிறிலங்கா பொலிஸ் பிரிவிற் குட்பட்ட மாந்தோட்டம் விசேட அதிரடிப் படை முகாமிற்கு சற்றுத் தொலைவில் ஆறாம் வாவி எனும் இடத்தில் மாற்றுக் குழு ஒன்றினால் முகாம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாக படைத் தரப்பிற்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தக் குழுவினர் கடந்த 22 ஆம் திகதி முதல் அந்தப் பிரதேசத்தில் நடமாடி வந்துள்ளதாகவும் தற்போது இந்த முகாமை அமைத்து வருவதாகவும் கூறப்படுகிறது.

## சுனாமியால் பாதிப்புற்ற மீனவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் வழங்கல்

(முல்லை)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மீனவர்களுக்கு வேள்ட் விசன் நிறுவனத்தின் நிதியுதவியுடன் முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தினரால் நேற்று முன்தினம் 4.00 மணிக்கு மீன்பிடி உபகரணத் தொகுதி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

முல்லை.மாவட்ட கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் அ.மரியராசா தலைமையில் ஆரம்பமான இந் நிகழ்வில் மங்கல விளக்கினை வேள்ட்விசன் நிறுவனத்தைச் சேர்ந்த மாவட்ட இணைப்பாளர் நைல்ஸ் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளின் முல்லை நகரத் தளபதி க.தினேஸ் ஏற்றினார். தொடர்ந்து வரவேற்புரையினை வேள்ட்விசன் நிறுவனத்தைச் சேர்ந்த பெரிபில்மன் நிகழ்த்தினார். தொடர்ந்து கருத்துரைகளை சமாசத்தலைவர் அ.மரியராசா, வேள்ட்விசன் நிறுவனத்தைச் சேர்ந்த றெயின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் நிறுவனத்தின் வலய முகாமையாளர் மன்வல் மற்றும் நைல்ஸ் ஆகியோர் வழங்கினார்கள்.

தொடர்ந்து கடற்றொழில் உபகரணங்களை முல்லை.மாவட்ட திட்டமிடல் செயலக பதில் பொறுப்பாளர் மதி, வேள்ட்விசன் நிறுவனத்தைச் சேர்ந்த றெயின் பெரிபில்மன், மன்வல் நைல்ஸ் ஆகியோர் பயனாளிகளுக்கு வழங்கினார்கள். இந் நிகழ்வில் 55 படகுகள், 55 வெளி இணைப்பு இயந் திரங்கள், வலைகள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். (20)

## 350 ரூபாவிற்கு உரம் வழங்கவே முடியாது 5 முன்னணி உர நிறுவனங்கள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

சிறிலங்காவில் இன்று முதல் 50 கிலோ உரத்தை 350 ரூபாவிற்கு வழங்க முடியாது என்று சிறிலங்காவின் ஐந்து முன்னணி உர நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

யூரியா உட்பட்ட உரங்களுக்கு மானியம் வழங்குகையில் அது தொடர்பில் உர இறக்குமதி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி உடன்பாட்டுக்கு வருவதுடன் அது தொடர்பில் உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட வேண்டும்.

ஆனால் விவசாய அமைச்சோ அரசாங்கத்தின் ஏனைய பொறுப்பு வாய்ந்த எவருமோ இது குறித்து உர நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தைகளை நடத்தவில்லை என்றும் அந்த நிறுவனங்களின் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

சி.ஐ.சி உர நிறுவனம் ஏ.பவர் நிறுவனம், மக்லெரென்ஸ் நிறுவனம், ஈ.ரி.ஏ லங்கா மற்றும் ஹேறலிஸ் உர நிறுவனங்களின் உயரதிகாரிகள் இதைத் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக பெரும் போகத்தின் போது இரண்டு இலட்சம் மெட்றிக் தொன் உரம் தேவைப்படுகிறது. இதில் 75 வீதத்தினை தங்களின் இந்த ஐந்து நிறுவனங்களே வழங்குவதாகத் தெரிவிக்கும் அந்த அதிகாரிகள், தேவையான அளவு உரம் தங்களின் களஞ்சியசாலைகளில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

உர நிறுவனங்களின் தொகையை கணக்கெடுத்து அதற்கான மானியத்தை விவசாய அமைச்சு தீர்மானித்த பின்னரே 350 ரூபாவிற்கு உரத்தை வழங்க முடியுமே தவிர அதற்கு முன்னர் வழங்க முடியாது என்றும் உர நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இன்று முதல் 350 ரூபாவிற்கு உரம் வழங்கப்போவதாக தெரிவிக்கும் அரசாங்கம் இது வரை உர நிறுவனங்களுடன் ஒருவார்த்தையைக் கூடப் பேசவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

அரசாங்கம் தங்களுடன் உடன்படிக்கை செய்துகொள்ளும் வரை 50 கிலோ யூரியா உரத்தினை 550 ரூபாவிற்கும் ஏனைய உரங்களை பழைய விலைக்குமே வழங்க வேண்டியேற்படும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

யூரியா உரத்திற்கான நிவாரணமாக தங்கள் ஐந்து நிறுவனங்களுக்கும் அரசாங்கம் வழங்க வேண்டிய தொகையான 200 கோடி ரூபா இன்னும் நிலுவையில் இருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

## நெல் உற்பத்தியில் ஆர்வம்காட்டும் முல்லை. மாவட்ட விவசாயிகள்

2005, 2006 பெரும்போக நெல் உற்பத்தியில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேச விவசாயிகள் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர்.

சிறுபோகத்தில் உற்பத்தி செய்த நெல் இன்னமும் சந்தைப்படுத்த முடியாத நிலை, இங்கு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நெல்லைக் கொள்வனவு செய்துவந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் நெல் கொள்வனவை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது எனவும் இப்பகுதி விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது. நெற் கொள்வனவு செய்யப்படாத நிலையிலும் விவசாயிகள் பெரும்போக நெல் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ப.நோ.கூ. ச[illegible]கள் [illegible]ற்கொள்வனவை மேற்கொண்டா[illegible] விவசாயிகள் நெருக்கடிகளின்றி மேலும் ஆர்வத்துடன் பெரும்போக நெல் உற்பத்தியை மேற்கொள்ள முடியும் எனவும் இப்பகுதி விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (46)

### மாதாந்த பொதுக்கூட்டம்

முல்லை நகர வாடகை சிற்றூர்தி உரிமையாளர் சங்க மாதாந்த பொதுக் கூட்டமும், மாவீரர் நிகழ்வில் பங்குகொண்டோருக்கான கௌரவிப்பு நிகழ்வும் நேற்றுக் காலை பத்து மணிக்கு வாடகை சங்கக் காரியாலயத்தில் சங்கத் தலைவர் ஜேம்ஸ் தலைமையில் ஆரம்பமானது. இதில் பாராட்டு உரையினை முல்லை பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார், முல்லைப் பிரதேச வர்த்தக சங்கப் பொருளாளர் மோகன், செய்தியாளர் சகிலா ஆகியோர்கள் வழங்கினார்கள். இந்நிகழ்வில் முல்லைநகர் வாடகை சிற்றூர்தி உரிமையாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (20)

## நெருக்கடிகளைச் சந்தித்துவரும் நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வவுனிக்குளத்தில் நன்னீர் மீன்பிடித்தொழிலை மேற்கொண்டுவரும் தொழிலாளர்கள் பல நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

குளத்தில் மீன்பிடித்தொழிலை மேற்கொள்பவர்களுக்கான மீன்பிடி வள்ளங்கள், மீன்பிடி வலைகள், உபகரணங்கள் இன்மையால் நன்னீர் மீன்பிடித்தொழில் பாதிப்படைந்து வருவதாகவும் மீனவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. பலகாலம் பாவனையில் இருந்த வலைகளாலேயே மீன்பிடித்தொழிலை மேற்கொள்வதாகவும் தமது தொழிலை மேம்படுத்துவதற்கு யாரும் முன் வராததையிட்டு நன்னீர் மீன்பிடிச் சங்கத்தினர் கவலை அடைந்துள்ளதாகவும் மீன்பிடிச் சங்கத் தினர் தெரிவித்துள்ளனர்.

வவுனிக்குளம் மற்றும் ஏனைய குளங்களில் நன்னீர் மீன்பிடி வளர்ப்பை ஊக்குவிக்கவும் நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்கவும் யாராவது முன்வருவார்களா என இப்பகுதி நன்னீர் மீன்பிடிப்பாளர் சங்கத்தினர் எதிர் பார்த்து இருக்கின்றனர். பொது நிறுவனங்களாவது முன்வந்து இத்தொழிலை மேம்படுத்த வேண்டும் என மீன்பிடி சங்கத்தினரால் கோரிக்கையும் விடப்பட்டுள்ளது. (46)

## கவனிப்பாரற்ற வீதியைத் திருத்துக

(மடு)

மன்னார்மாவட்ட மடுப்பிரதேசத்தில் உள்ள வலயன் கட்டிலிருந்து விளாத்திக்குளம் செல்லும் பிரதான வீதியின் ஒன்பது கிலோ மீற்றர் தூரம் பல ஆண்டுகாலம் திருத்தியமைக்கப்படாத நிலையில் உள்ளது. இதன் காரணமாக மக்கள் போக்குவரத்துச் செய்வதற்கு பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே உரியவர்கள் இவற்றைக் கவனத்தில் எடுத்து வீதியினைத் திருத்தியமைக்குமாறு இப்பகுதி மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (40)

# மகிந்தவின் கொள்கைகளால் வலுவடையும் நெருக்கடிகள்!

மகிந்த ராஜபக்ஷ சனாதிபதியாகப் பதவி யேற்று இரண்டு வாரங்களைக் கடந்துவிட்ட நிலையில் அந்த இரண்டு வாரங்களும் அவருக்கு மகிழ்ச்சியளிக்கும் காலப்பகுதி யெனக் கூறமுடியாது. காரணம் அவரின் நிர்வாகத்தில் அனைத்துப் பக்கங்களிலும் அவரால் தவிர்க்க முடியாத சவால்கள் நிரம்பி யிருப்பதாகும். எனினும் அந்த சவால்களை எதிர்நோக்க அவர் விரைவாகவே பதவிக்கு வந்துவிட்டார். வந்ததும் அவர் முதலாவது சந்தித்த சவாலாக முன்னாள் சனாதிபதியுட னான கொடுக்கல் வாங்கல் எனலாம். இந்த விவகாரம் தொடர்பில் அவர்களுக்கிடையிலான முறுகல் நிலையை சிலர் தவறாகப் புரிந்து கொள்ளலாம்.

ஆயினும் கடந்த 2004 ஆம் ஆண்டு ஜே.வி.பி யுடன் சந்திரிகா கூட்டுச் சேர்ந்ததைத் தவறு என தாமதமாகவே உணர்ந்து கொண் டுள்ளார். அதனாலேயே ராஜபக்ஷவுக்கு ஆதரவாக தேர்தல் பிரச்சாரம் செய்தபோதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை பின்பற்றுவோருக்கு மட்டும் வாக்களிக்க வேண்டும் என மக்களை அவர் கேட்டுக் கொண்டார். அவர் அவ்வாறு குறிப்பிட்டது ஜே.வி.பி யினரைக் குறிவைத்து என்பதே உண்மையாகும். அதுமட்டுமன்றி தனது கட்சியின் வாக்குகளை ஜே.வி.பியினர் விழுங்கி விடக்கூடும் என்ற காரணமுமாகும். அத்துடன் தேர்தல் சமயத்தில் அநுராவுடன் இணைந்து அவர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகவும் பேசிவந்தார். இனப்பிரச்சினை தொடர்பாக சமஷ்டித் தீர்வு காணப்பட வேண்டியது பற்றி கலந்துரையாடி யிருப்பது ரகசியமாகவே இருந்தது. கடந்த 17 கொண்டிருந்தார். அப்போது ஐ.தே.கட்சியே வெற்றிபெறும் என்றும் தெரிவித்தனர். ரணில் வென்றால் தான் தனது 15 உறுப்பினர்களை சிறி லங்கா சுதந்திரக் கட்சியில் இணைப்பதாக சந்திரிகா தெரிவித்திருந்தார்.

எவ்வாறேனும் மகிந்தராஜபக்ஷ வென்று விட்ட போதிலும் சந்திரிகா தனது அதிகாரத்தைக் கைவிட முடியாத நிலையிலேயே காணப்படுகிறார். அதுமட்டுமன்றி அரச பாதுகாப்பு அதிகாரிகளின் பாதுகாப்புடன் "முன்னாள் சனாதிபதி என்ற கௌரவப் பதவியில் அமர்ந்து தனது விருப்பத்துக்கும் கருத்துக்கும் ஏற்ப ராஜபக்ஷவை ஆட்டிப்படைக்கும் திட்டம் ஒன்றும் சந்திரிகாவிடம் காணப்பட்டது. ஆனால் தற்போது ராஜபக்ஷ பதவியேற்றதும் அவரது இத்திட்டங்கள் யாவும் முறியடிக்கப்பட்டுவிட்டன.

மகிந்த தனது முதல் நடவடிக்கையாக முன்னாள் சனாதிபதி சந்திரிகாவின் செயலர் லலித் வீரதுங்கவுக்கு சந்திரிகாவை சந்திக்கத் தடை விதித்தார். பின்னர் சந்திரிகா அனுமதித்த ஊழியர்களின் காசோலைகளை செல்லுபடியற்ற தாக்கினார். எனினும் தனது புதிய அலுவலகத்துக்கு சென்றதும் மேற்படி காசோலை பற்றி விளக்கமளிப்பதாக சந்திரிகா தெரிவித்துள்ளார்.

எனினும் ராஜபக்ஷவினதும் அலுவலர்கள் இவ்விடயம் தொடர்பில் தீவிர பரிசோதனை நடத்தவிருக்கின்றனர்.

அத்துடன் சந்திரிகா மீண்டும் சபைக்கு வருவதற்கு மகிந்த தீவிரமாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இதற்கிடையில் மகிந்தவின் தொகுதி வெற்றிடத்துக்கு முன்னாள் மீன்பிடித் குள்ளாகிவிட்டார். அத்துடன் இனப்பிரச்சினைத் தீர்வில் சந்திரிகா கடைப்பிடித்த கொள்கையான நோர்வே மத்தியஸ்தத்தையே மகிந்தவும் தொடர்ந்திருப்பதால் ஜாதிக ஹெல உறுமய தனது எதிர்ப்பைக் காட்டத் தொடங்கிவிட்டது.

எனவே ராஜபக்ஷவின் நடவடிக்கையால் கூட்டுக் கட்சிகள் குழம்பியுள்ள நிலையில் யுத்தத்திற்கு முடிவைக் கட்டி நிரந்தர சமாதா னம் வேண்டி வேறொரு கட்சியுடன் மகிந்த கூட்டுச்சேருவாரா என்பதைக் காலம் தான் கூறும்.

தமிழர்களின் பிரச்சினைத் தீர்வில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அண்மைய மாவீரர் தின உரையில் தனது முடிவைத் தெரிவித்துள்ளார். அதில் ஒற்றை யாட்சிக்குள் தீர்வு என்பதை அவர் நிராகரித் துள்ளார். ஒருவித புரிந்துணர்வுடன் அவர் இதனைத் தெரிவித்துள்ள போதிலும் மீண்டும் ஒரு விடுதலைப் போருக்கு செல்வார் என்ற அச்சமும் தோன்றியிருப்பதால் ராஜபக்ஷ தனது கொள்கையில் இருந்து நீங்கி சாதகமான முறையில் வேக மாகச் செயற்படவேண்டும்.



ஆனால் அவரின் உரையினால் தாங்கள் ஒன்றும் அஞ்சப் போவதில்லை என்று நிமல் சிறிபாலடிசில்வா போன்றோர் கூறியிருப்பது பொருத்தமற்றதாகும்.

இதற்கிடையில் அனை நிலைப்பாட்டில் ஐதேகட்சி . ஈபிடிபி முன் வைக்கும் சமஷ்டி முறைத்தீர்வு கூட லை கூடுமா என்ற நிலைப்பாடு தோன்றியுள்ளது.

கடந்த வாரம் மகிந்த நன்கு திட்டமிட்டு தயார் செய்யப்பட்ட பிரேரணைகளுடன் சில ராஜதந்திரிகளை சந்திக்கச் சென்றார். அப்போது பல கேள்விகளுக்கு அவர் விடையளித்துள்ளார். அதன் போது அவரின் இனப்பிரச்சினை தீர்வுக்கான யோசனைகள், புலிகளின் அறிவிப்பு, ஏனைய கட்சிகளின் நிலைப்பாடு என்பனவும் ஆராயப்பட்டன.

அடுத்ததாக மகிந்த தனது முதலாவது வரவு செலவுத் திட்டம் பற்றிய யோசனைகளை வரும் வியாழன்று வெளியிடவுள்ளார். இதன் போது அதிக ஒதுக்கீடு செய்யப்படும் பாதுகாப்பு அமைச்சுக்கு அவர் எவ்வளவு ஒதுக்குவார், அதன் மூலம் பொது மக்களின் எவ்வாறான எதிர்ப்பை சம்பாதிப்பார் என்ற எதிர்பார்ப்பும் காணப்படுகின்றது.

அதற்கிடையில் ஈரானிலிருந்து ஆயுதங்கள் கொள்வனவு செய்ய ஒப்பந்தம் கைச்சாத்தி டப்பட்டுள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன.

எனவே ஒருபுறம் சமாதான நடவடிக்கை களையும், இன்னொருபுறம் யுத்தத்திற்கான ஏற்பாடுகளையும் மகிந்த ராஜபக்ஷ தலைமை யிலான அரசு மேற்கொண்டு வருகின்றது.


ஆம் திகதிய தேர்தலுக்கு முன்பு இரண்டு கட்டங்களில் சந்திரிகா சமஷ்டி முறைக்கு ஆதரவாகவே பேசியிருக்கிறார். இது மகிந்தவை மட்டந்தட்டும் ஒரு நிகழ்வு என்பதைக் கூறத் தேவையில்லை.

இதைவிட மோசமான நிலை என்றால் சந்திரிகா மீண்டும் பாராளுமன்றுக்கு வரவிருப்ப தாக அறிவித்திருப்பதாகும். இது ராஜபக்ஷ வுக்கு ஒரு சங்கடத்தை ஏற்படுத்த முடியும். அதாவது தன்னோடு கூட்டுச்சேர்த்துள்ள ஜே.வி.பி, ஹெல உறுமய உறுப்பினர்களுக்கு பாராளு மன்றத்தில் தகுந்த பதவியை வழங்காத தால் அவர்களையும் ரணிலையும் தனது ஏனைய கட்சியாளர்களுடன் கூட்டுச் சேர்த்து சந்திரிகா தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தி விடுவார் என எண்ணுவதாகும். அதுமட்டுமன்றி சந்திரிகா சொகுசான சனாதிபதி மாளிகை யிலிருந்தும் நீங்கிச் செல்லவும் தயங்கியதுடன் சனாதிபதி மாளிகையின் தளபாடங்களையும் ஆவணங்களையும் பாவிப்பதுடன் அவற்றி லேயே கண்ணாகவுமிருந்திருக்கின்றார். அதுமட்டுமன்றி சில சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சந்திரிகாவுக்கு அறி வுரைகளைக் கூறி தலைமைப் பொறுப்பை கைவிடவேண்டாம் எனவும் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

தேர்தலுக்கு முன்பு ஆளுநர் ஒருவருக்கு சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பிரிவுபசார விழாவின் போதும் சந்திரிகாவை அவ் ஆளுநர் எந்தச் சந்தர்ப்பத்திலும் சனாதிபதி மாளிகை யிலிருந்து செல்ல வேண்டாம் என்று கேட்டுக் துறை அமைச்சர் ஜோர்ஜ் ராஜபக்ஷவின் மகளும் மகிந்தவின் குடும்ப உறவினருமான நிருபமா ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார். எனினும் மேலும் பல வெற்றிடங்கள் காணப்படுவதால் சந்திரிகா அதனை நிரப்ப எதிர்பார்க்கலாம். ஆனால் ராஜபக்ஷ அதற்கு தடை யேற்படுத்தலாம். அதன்மூலம் பெரும் ஆபத்தில் சிக்கிக்கொள்ளும் நிலையும் ஏற்படலாம். இவை யாவற்றுக்கும் மேலாக ராஜபக்ஷ தற்போது இன்னும் ஒரு பிரச்சினைக்குள்ளாகியிருக்கிறார். அது ஜே.வி.பியுடனான கருத்து மோதலாகும். அதனை அவர் சுலபமாக தீர்த்துக்கொள்ள முடியாது. அவர்களுடன் கூட்டுச் சேர்ந்துள் ளமையால் அவர்களின் கோரிக்கைகளை அவர் நிறைவேற்றியே தீரவேண்டும்.

இந்த முறுகல் நிலை அண்மைய அமைச் சரவை நியமனத்தின் பின்னர் தோன்றியது. அதன் ஒரு கட்டமாக விவசாய அமைச்சரான ஜே.வி.பி யின் அநுரகுமார திசாநாயக்க தமது கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பதவிகள் அமைச்சரவை அந்தஸ்த்தில் இல்லாதவை எனக் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த விடயம் ஜே.வி.பி யினருக்கு வெறுப்பை ஏற்படுத்தியிருப்பதுடன் மகிந்த ராஜபக்ஷ தம்மை ஒதுக்குவதற்கான முதற் படியே இது எனவும் அவர்களைச் சிந்திக்க வைத்துள்ளது. காரணம் ஜே.வி.பி முக்கிய அமைச்சுப் பதவிகளை முன்வைத்தே மகிந்த வுடன் கூட்டு இணைந்தது. அந்த வகையிலும் மகிந்த ஜே.வி.பி யின் முதல் எதிர்ப்புக்




வராலும், ஏற்றுக் கொள்ளக் கூடிய இறுதித் தீர்வுக்கான ஒட்டுமொத்த அபிப்பிராயம் பற்றி மகிந்த ராஜபக்ஷ தென்னி லங்கை கட்சிக ளுடன் அவரது சந்திப்பொன்றை செய்துள்ளார். அவரது "மகிந்த சிந்தனை" என்ற அடிப்படை யின் கீழ் மூன்று மாதத்துள் அனைத்து தென்னிலங்கை அரசியல் கட்சிகளுடனும் பேசி எடுக்கப்படும் முடிவை விடுதலைப்புலிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

ஆனால் தற்போது ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய கட்சிகள் கொண்டிருக்கும்

தரிஷா
பஸ்ரியான்
(டெய்லி மிரர்)
தமிழில் - வடிவேல்

தவிர்க்க முடியாது விட்டால் யுத்தம் செய் வது சரியே. எனினும் அனைத்துத் தடை களையும் நிறுத்தி மகிந்த விடுதலைப் புலிக ளைப் பேச்சுக்கு அழைப்பார் எனின் இந் நாட்டில் மீண்டும் ஒரு இரத்தக் களரியைத் தவிர்க்கலாம்.

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவருக்கு விளக்க மறியல்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பிரதேச காவல்துறையினரால் சம்புக்குளம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்புக்குளம் பகுதியில் கசிப்பு விற்பனை குறித்து கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து அங்கு விரைந்த காவல்துறையினர் கடந்த முதலாம் திகதி 85 லீற்றர் கோடாவும் நான்கு போத்தல்கள் கசிப்பும், உற்பத்தி செய்யப்படும் பெரல்கள், பைப்புக்கள் எனப் பலபொருட்களை யும் மீட்டனர்.

சந்தேக நபர் மறுநாள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன் றில் முற்படுத்தப்பட்டார். சந்தேக நபரை எதிர் வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதியாளர் உத்தரவிட்டுள்ளார். இதுபற்றிய மேலதிக விசாரணைகளை காவல் துறையினர் நடத்தி வருகின்றனர். (12)

# பரீட்சை அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம்

(பூநகரி)

க.பொ.த (சா.த) பரீட்சையில் கடமை புரியும் அலுவலர்களுக்கான பரீட்சை அறி வுறுத்தற் கூட்டம் கடந்த 28ஆம் திகதி காலை 10.00 மணிக்கு வலயக் கல்விப் பணி மனையின் வலயக் கல்விப் பணிப்பாளர் குரு குலராசா தலைமையில் ஆரம்பமானது.

அக் கூட்டத்தில் உதவிப்பரீட்சை ஆணை யாளர் சொலமன் பரீட்சையின் ஒழுங்கு விதிகள் தொடர்பாக எடுத்துக் கூறினார்.

அதனைத் தொடர்ந்து அலுவலர்களிடம் எழும் சந்தேகங்களிற்கும் விளக்கம் அளித்தார். (34)



# கடந்த வாரத்தில்

## 24.11.2005 30.11.2005

**24.**

☞ இந்தியாவின் பீகார் மாநிலத்தின் புதிய முதலமைச்சராக நிதிஷ் குமாரும், பீகாரின்துணை முதலமைச்சராக ராஜேஷ் குமாரும் பதவியேற்பு.



☞ ஈராக் தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்கப்படைகளின் கவசவாகனத் தொடர் அணி நிறுத்தப்பட்டிருந்த வலயத்துக்குள் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 35 பேர் பலி: 50 பேர் படுகாயம்.



**25.**

☞ ஆபிரிக்க நடான லைபீரியாவில் நடந்த அதிபர் தேர்தலில் எல்லன் ஜோன்சன் சர்லீடீஃப் அம்மையார் வெற்றி பெற்றுள்ளார் என அந்நாட்டின் தேர்தல் ஆணையம் அறிவிப்பு.

☞ தமிழ்நாட்டின்தஞ்சாவூர் இராமநாதபுரம் மாவட்டங்களில் காட்டாற்று வெள்ளத்தில் சிக்கி இரண்டு பயணிகள் பேருந்துகள் கவிழ்ந்ததில்.145 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு.



**26.**

☞ இரு கனேடியர் ஒரு பிரிட்டிஸ் பிரஜை ஆகியோர் உட்பட நான்கு மேற்கத்திய உதவிப் பணியாளர்கள் ஈராக் தலைநகர் பாக்தாத்தில் வைத்துக் கடத்தல்.

☞ எகிப்திய பாராளுமன்றத் தேர்தலுக்கான நான்காம் கட்ட வாக்களிப்பில் ஏற்பட்ட வன்முறைகளில் 800 இற்கும் மேற்பட்டோர் கைது.

☞ மத்திய சீனாவின் பலபகுதிகளை பூகம்பம் உலுக்கியதில் 14 பேர் பலி; 377 பேர் காயம்.

☞ 40 ஆண்டுகளாக இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த ரபா கடவை ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பின் கீழ் திறந்து வைக்கப்பட்டது.

☞ ஈராக் தலைநகர் பாக்தாத்தின் மேற்குப்பகுதியில் இடம்பெற்ற தற்கொலைக் கார்க்குண்டுத் தாக்குதலில் ஐந்துபேர் உயிரிழந்தனர்; ஐந்துபேர் காயம் .

**27.**

☞ சீனாவின் வடபகுதியில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் இடம்பெற்ற வெடி விபத்துச் சம்பவத்தில் 100 தொழிலாளர்கள் பலி: நூற்றுக்கு மேற்பட்டோர் காணாமல் போயினர்.

☞ ஈரானின் கிழக்குப்பகுதியின் குவாஷின்,டான்பாங், கலாடி ஆகிய நகரங்களில் நான்கு தடவை நிலநடுக்கம் ஏற்பட்டதில் 15 பேர் பலி; 300 பேர் படுகாயம்.

**28.**

☞ உலக காலநிலை மாற்றம் குறித்த வருடாந்த மாநாடு கனடாவின் ரொரன்ரோ நகரில் ஆரம்பம்.

☞ புதுடில்லி குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டதாக இந்திய மத்திய அரசு அறிவிப்பு.



☞ ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைன் விசாரணைக்காக நீதி மன்றம் அழைத்து வரப் பட்டபோது அவருக்கு ஆதரவாகவும் எதிராகவும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

**29.**

☞ பங்களாதேஷில் துறைமுக நகரமான சிட்டகொங்கில் உள்ள நீதி மன்றிலும்,காசிபூர் பகுதியிலுமுள்ள நீதி மன்றிலும் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 13 பேர் பலி; 55 பேர் காயம்.

**30.**

☞ இந்தியா-ரஷ்யா கூட்டுத்தொழில் நுட்ப முயற்சியினால் உருவாக்கப்பட்ட "பிரமோஸ் " ஏவுகணை இந்தியாவின் ஒரிஷா மாநிலத்தில் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

☞ ஈராக்கின் பகுபா நகருக்கு வடகிழக்கே அபுசைதா என்ற கிராமத்தில் பேருந்தில் சென்று கொண்டிருந்த ஒன்பது சியா முஸ்லிம்களை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர்.

# அரசின் தாமத சமாதான நகர்வை மாற்ற நோர்வேக்கு அவசியம் ஏற்பட்டுள்ளது

### –த ஹிந்து நாளிதழ் தெரிவிப்பு

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் நோர்வே ஏற்பாட்டாளருக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்டத்துடன் நெருங்கிச் செல்வதற்கும் அரசாங்கத்தின் சார்பில் இருந்து ஏற்பட்டுள்ள சமாதானத்தின் பாலான தாமத நகர்வை மாற்றுவதற்கும் அவசியம் ஏற்பட்டுள்ளதாக த ஹிந்து நாளிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் நோர்வே தரப்பினர் எந்த நேரத்திலும் சிறிலங்கா சனாதிபதியைச் சந்தித்து நடைமுறைப் பிரச்சினைகள் குறித்து ஆராயவுள்ளதாகக் குறித்த இதழ் தெரிவித்துள்ளது.சிறிலங்கா அரசாங்க தரப்பினரே தமது ஏற்பாட்டு நிலையை வரவேற்கின்ற அதேநேரம் அவர்களில் சிலரே தம்மை அதிலிருந்து விலகுமாறு வலியுறுத்துகின்றனர்.

இந்த நிலை தொடருமாக இருந்தால் தாம்ஏற்பாட்டு நிலையைத் தொடரமுடியாது போகும் என்பதே நோர்வேயின் நிலைப்பாடாகும் என த ஹிந்து தெரிவித்துள்ளது.

இதேவேளை கருணா குழுவை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான நிழல் யுதத்திற்கு அரசாங்கம் பயன்படுத்தினால் நடைமுறையில் உள்ள பதற்ற சூழ்நிலை தொடரவே செய்யும் எனத் தெரிவித்துள்ள த ஹிந்து நாளிதழ் சிறிலங்காவின் புதிய அரசாங்கம் சிங்கள சார்புக் கொள்கையை கடைப்பிடிக்கின்றமையால் தமிழர்கள் தொடர்பில் அந்த அரசாங்கத்தினால் புரிந்துணர்வை ஏற்படுத்த முடியாது என அரசியல் தரப்புகளைச் சுட்டிக்காட்டி குறிப்பிட்டுள்ளது. (32)

# சட்டவிரோத குடியேற்றம் அமெரிக்காவில் குறைந்துள்ளது

(கொழும்பு)

சட்டவிரோதமான ஆவணங்களைச் சமர்பித்து அமெரிக்காவுக்குள் பிரவேசிக்கும் இலங்கையர்களின் தொகை குறைந்துள்ளதாக இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

புதிய தொழில்நுட்பங்களின் அறிமுகத்தையடுத்தே இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அந்தத் தூதரகம் தெரிவித்துள்ளது; இது தொடர்பில் அமெரிக்க தூதரகத்தின் பேச்சாளர் எலினாரெத்தோர் தெரிவிக்கையில்;

கடந்த ஆண்டைக்காட்டிலும் இந்த ஆண்டில் சட்டவிரோதமாக பொய்யான ஆவணங்களைச் சமர்ப்பித்து அமெரிக்காவுக்குள் பிரவேசிக்கும் இலங்கையர்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டுள்ளது.

கடந்தவருடத்தில் 84 இலங்கையர்கள் இவ்வாறான ஆவணங்களைச் சமர்ப்பித்து அமெரிக்காவுக்குள் பிரவேசித்தனர்.

இது இந்த வருடத்தில் 58 ஆகக் குறைந்துள்ளது. சட்டவிரோதமாக ஆவணங்களைச் சமர்ப்பித்து அமெரிக்காவுக்குள் பிரவேசிப்போர் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்கிறோம்.

இலங்கையர்கள் மட்டுமன்றி ஏனைய நாட்டினரும் இவ்வாறு அமெரிக்காவுக்குள் பிரவேசிக்கின்றனர்.இந்த நிலையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பங்களின் அடிப்படையில் சட்டவிரோத ஆவணங்களைக் கண்டுபிடிக்க முடிகிறது. இதேவேளை தொடர்ந்தும் சட்டவிரோத ஆவணங்கள் மூலம் அமெரிக்காவுக்குள் பிரவேசிப்பவர்களைக் கண்டுபிடிக்க விழிப்பாகச் செயற்படுகிறோம் எனத்தெரிவித்தார்.

# அமைச்சுக்களின் செயற்பாடுகளை நேரடியாகக் கண்காணிக்க மகிந்த முடிவு

(கொழும்பு)

சிறிலங்காவின் அனைத்து அமைச்சுக்களினதும் செயற்பாடுகளை ஆராய்வதற்காக மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அமைச்சுக்களுக்குச் சென்று அந்த அமைச்சுக்களின் பணிகளை ஆராய்வதற்கு புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளார்.

அனைத்து அமைச்சுக்களுடனும் தொடர்புடைய தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் பங்களிப்புடன் அமைக்கப்படும் ஆலோசனை சபையானது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சந்தித்து அந்தந்த அமைச்சின் பணிகள் குறித்து ஆராயவுள்ளது.

அந்தக் கூட்டங்களில் இயலுமான வகையில் கலந்து கொள்வதற்கு மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

அமைச்சுக்களில் நியமிக்கப்படும் இந்த ஆலோசனை சபையின் கூட்டத்தில் அந்தந்தத் துறைக்கான அமைச்சர், பிரதியமைச்சர் ஆகியோர் கலந்து கொள்ள வேண்டும். குறைந்த பட்சம் பிரதியமைச்சராவது கலந்து கொள்ள வேண்டும் என மகிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

ஒருவருட காலத்தை இலக்கு வைத்து துரித அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு மகிந்த ராஜபக்ஷவும் அரசாங்கமும் எடுத்துள்ள முடிவை நடைமுறைப்படுத்த இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அலரி மாளிகை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பொலிஸ் விசேட ஆணைக் குழுக்களின் செயற்பாடுகளை நிறுத்த உத்தரவு

(கொழும்பு)

சிறிலங்கா தேசியபொலிஸ் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டிருக்கும் இரு விசேட குழுக்களின் செயற்பாடுகளை நிறுத்துமாறு சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். சிறிலங்கா அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தத்திற்கமைய 2002 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் மூன்று வருடபதவிக்காலம் கடந்த மாதம் 24 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. புதிய ஆணைக்குழு நியமிக்கப்படும் வரை பொலிஸ் சேவைக்கான நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், பணிநீக்கம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்பவற்றை மேற்கொள்வதற்காக ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் றஞ்சித் அபேசூரிய உட்பட்ட ஆணையாளர்களினால் இரு குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன.

எனினும் இது குறித்து பொலிஸ் திணைக்களத்திற்கு சட்ட ஆலோசனை வழங்கிய சட்டமா அதிபர் திணைக்களமானது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பதவிக்காலம் முடிவடைந்ததையடுத்து அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட நியமனங்களும் இரத்தாவதாகத் தெரிவித்துள்ளது. இதற்கமைய இந்த இரு குழுக்களுக்கும் சட்டரீதியான அதிகாரங்கள் எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ.தே.க.வில் தீவிரமடையும் உள்முரண்; ரணிலுக்கு எதிராகத் தொடரும் போர்க்கொடி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் பொறுப்பையும், பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பையும் பிரதித்தலைவர் கருஜெயசூரியவிடம் ஒப்படைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியினர் ரணிலுக்கு எதிராகத் தொடர்ந்து போர்க்கொடி தூக்கிவருகின்றனர்.

மகிந்த விஜேசேகர, ராஜித சேனாரட்ண, மிலிந்த மொறகொட ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைமையிலான குழுக்கள் ரணில் விக்கிரமசிங்கவிடம் இது தொடர்பான வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலக வலியுறுத்தி அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரின் கையெழுத்துடன் கூடிய கடிதமும் ரணிலிடம் கையளிக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்வரும் தேர்தலிலும் ரணில் போட்டியிடவுள்ளாரா என்பது பற்றியும் இந்தக் கடிதத்தின் ஊடாக ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

எதிர்வரும் புதன்கிழமையளவில் இது குறித்து தன் முடிவைத் தெரிவிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ரணில் விக்கிரமசிங்க பதிலளித்துள்ளார். எதிர்க்கட்சி மற்றும் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து விலகி அந்தப் பொறுப்புக்களை கருஜெயசூரியவிடம் கையளிக்க ரணில் இணங்கியிருப்பதாகவும் அந்த முடிவை எதிர்வரும் புதன்கிழமை ரணில் அறிவிக்கக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

கட்சியின் மூத்த தலைவர் என்ற பதவியை ஏற்படுத்தி அதனைப் பொறுப்பேற்று வெளிநாட்டு விடயங்களைக் கையாளல், கட்சிக்கான ஆலோசனைகளை வழங்கல் போன்ற நடவடிக்கைகளில் மட்டும் ஈடுபட்டு ஒதுங்கி இருக்குமாறும் ரணில் விக்கிரமசிங்கவை அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

எதிர்வரும் சனவரி மாத இறுதியில் நடைபெறும் ஐ.தே.க.வின் தேசிய சம்மேளனக் கூட்டத்திற்குப் பின்னர் நாடளாவிய அளவில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மறு சீரமைப்புப் பணிகள் மேற் கொள்ளப் படவுள்ளதாகவும் அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# மருதம் வாணிபம் நடாத்தும்

## இயலவிற்பனை

காலம் : 2005.12.07

இடம் : சிங்கர் சீர்மை அருகாமை, யாழ்சாலை, கிளிநொச்சி.

**பொருள் விரிப்பு**
- இலத்திரனியல் பொருள்கள்
- அழகுசாதனப் பொருள்கள்
- புடைவைகள்
- உதிரிகள்

2005.12.05 ஆம் நாள் முதல் இயலவிற்பனை நிலையத்தில் பொருள்களை பார்வையிட முடியும்.

**கவனிப்புக்கு:** இயலவிற்பனை நாளன்று நுழைவுக்கட்டணமாக உருபா ஐம்பது (50.00) செலுத்தி இயலத்தில் பங்கு கொள்ளலாம். (சி-13422)


# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு.**

## அழுக்குத் துணிகள் சலவை செய்தல்

01. முல்லைத்தீவு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட வைத்தியசாலைகளுக்கு அழுக்குத்துணிகள் சலவை செய்வதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. 2006 ஜனவரி முதல் டிசம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான இவ் வழங்கல் சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் 2005.12.16 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிவரையும் முல்லைத்தீவு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு ஒரு வழங்கல் /சேவைக்கான ஒரு ஆவணத்தொகுதி மட்டுமே வழங்கப்படும்.

02. அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடை செய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

03. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ் கூறப்படும் தொகையைச் செலுத்தி கேள்வி ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 2005.12.19 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

04. வைப்புத் தொகைகளும் ஆவணங்களும்

| வைத்தியசாலை | கேள்வி வைப்புப் பணம் |
|---|---|
| மாவட்ட வைத்தியசாலை, முல்லைத்தீவு | 1000/= |
| சுற்றுயல் கூறு, மல்லாவி | 750/= |
| கிராமிய வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு | 750/= |
| ம.ம.ம.மனை, முள்ளியவளை | 500/= |
| ம.ம.ம.மனை, நட்டாங்கண்டல் | 500/= |
| ம.ம.ம.மனை மாங்குளம் | 500/= |

05. கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விச் சபையினால் 2005.12.19 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்விப்பத்திரம் திறக்கப்படும். இதில் விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும்போது சமுகமளிக்கலாம்.

06. கேள்விகள் தொடர்பான கேள்விச்சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

07. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் எமது பணிமனையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி து.வி.ஜெயக்குலராஜா,
மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்,
முல்லைத்தீவு.

(சி-13425)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு.**

## பால் தவிர்ந்த சமைத்த/ உலர் உணவு வழங்கல் - 2006

01. முல்லைத்தீவு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்தசமைத்த/ உலர் உணவு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. 2006ஜனவரி முதல் டிசம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான இவ் வழங்கல் சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் 2005.12.16 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிவரையும் முல்லைத்தீவு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு ஒரு வழங்கல் /சேவைக்கான ஒரு ஆவணத்தொகுதி மட்டுமே வழங்கப்படும்.

02. அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடை செய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

03. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ் கூறப்படும் தொகையைச் செலுத்துவதுடன் பெறுமதி ஆவணத்தை (Worth Certificate) எமது பணிமனையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 2005.12.19 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

04. வைப்புத் தொகைகளும் ஆவணங்களும்

அ. உலர் உணவு வழங்கல்

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை | பெறுமதி ஆவணம் (worth Certificate) |
|---|---|---|---|
| சுற்றுயல் கூறு, மல்லாவி | 300/= | 35,000/= | 75,000/= |
| கிராமிய வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு | 250/= | 25,000/= | 75,000/= |

ஆ. பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை | பெறுமதி ஆவணம் (worth Certificate) |
|---|---|---|---|
| மாவட்ட வைத்தியசாலை முல்லைத்தீவு | 350/= | 40,000/= | 75,000/= |
| ம.ம.ம.மனை, முள்ளியவளை | 200/= | 20,000/= | 25,000/= |
| ம.ம.ம.மனை, நட்டாங்கண்டல் | 200/= | 20,000/= | 25,000/= |
| ம.ம.ம.மனை, மாங்குளம் | 200/= | 20,000/= | 25,000/= |

இ. ஆவணங்கள்.

01. 01.12.2005 ஆம் திகதிக்குப் பின் பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறுமதியை உறுதிப்படுத்தும் சான்றுக்கடிதம் (பி.செ.எம்.201 படிவம்).

02. கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விச் சபையினால் 2005.12.19 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்விப்பத்திரம் திறக்கப்படும். இதில் விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும்போது சமுகமளிக்கலாம்.

03. கேள்விகள் தொடர்பான கேள்விச்சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

04. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் எமது பணிமனையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி து.வி.ஜெயக்குலராஜா,
மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்,
முல்லைத்தீவு.

(சி-13424)

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கலைப்பீடம்

## பத்திரிகையியல் டிப்ளோமா (முழுநேரக்)
## கற்கைநெறிக்கான அனுமதி-2006

2004 ஆம், 2005 ஆம் ஆண்டுகளில் க.பொ.த.(உயர்தரத்)தேர்வில் சித்தியடைந்ததுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதி பெற்றோரிடமிருந்து ஓராண்டு முழுநேரப் பத்திரிகையியல் டிப்ளோமா கற்கைநெறி அனுமதிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

அனுமதிக்கான தெரிவு முறை- எழுத்துத் தேர்வும் (எழுத்து ஆற்றல், அறிக்கையிடும்திறன், மொழியாற்றல், சமூகஅறிவு) நேர்முகத்தேர்வும்.

**கட்டணங்கள்:-**

| | | |
|---|---|---|
| கற்கைநெறிக்கட்டணம் | ரூபா | 20,000.00 |
| பதிவுக்கட்டணம் | ரூபா | 750.00 |
| நூலக வைப்புப் பணம் (மீளளிக்கத்தக்கது) | ரூபா | 750.00 |
| நூலகப் பயன்பாடு | ரூபா | 1000.00 |
| மொத்தம். | ரூபா | 22,00.00 |

விண்ணப்பப் படிவங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் ரூபா100/= செலுத்திப்பெற்ற பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம் விண்ணப்பப் படிவங்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். முதுநிலை உதவிப் பதிவாளர், கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:-17.12.2005.

விண்ணப்பதாரிகள் எல்லோரும் 18.12.2005 காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும் எழுத்துத் தேர்வுக்குத்தோற்றவேண்டும்.

பதிவாளர்.

(சி.13427)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சின்னத்தம்பி இராசநாயகம்

(இல.184 ஸ்கந்தபுரம்,கிளிநொச்சி)

தியாகதீ " லீபன் மருத்துவசேவையின் பணியாளரான திரு. இ. சிவகுமார் அவர்களின் தந்தை 03. 12. 2005 அன்று அகாலச் சாவடைந்த செய்தியினைக் கேட்டு மிக வேதனையடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவர்களின் துயரத்தில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

தகவல்:- தியாகதீபம் திலீபன் மருத்துவசேவை,
போராளிகள்,
பணியாளர்கள்,
அபிவிருத்திக்குழுவினர்கள்.

(சி.13426)

எங்கள் அதிபரை.......

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் கிளிநொச்சி கல்வி வலயத்திலிருந்து சிறந்த அதிபராகத் தெரிவு செய்து கௌரவிக்கப்பட்ட... எமது அன்புக்கும் பெரு மதிப்புக்குமுரிய கிளி.மயில்வாகனபுரம் அ.த.க பாடசாலை அதிபர்

## உயர்திரு சுப்பிரமணியம் இராஜசிங்கம்

(பருத்தியடைப்பு-ஊர்காவற்றுறை) அவர்களைப் பெருமகிழ்வோடு மனதாரப் பாராட்டுவதோடு அவரது கல்விப்பணி மேலும் ஓங்கிட இறையருள் வேண்டி நிற்கும்.

ஆசிரியர்கள்

திரு.செ.அருளானந்தசிவம்,
திருமதி.சிவசோதி ஜெகநாதன்,
(கிளி.உமையாள்புரம் அ.த.க.பா).

திரு. சே.ஜெயதேவன்,
(கிளி.மயில்வாகனபுரம் அ.த.க.பா)

(7073)

# பண்டிகையை முன்னிட்டு
## விஷேட வெகுமதி
### என்றும் பயணத்தின் உதவியாளன்

# DAIDO

52,900.00

**CF 90C** 4 Gear இன் சிறப்புகள்
எரிபொருள் சிக்கனம்,
குறைந்தளவு தேய்மானம்,
கூடிய உத்தரவாதத்துடன்,
தேவையான அளவு உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.




செரெண்டிப் மோட்டர் என்ரபிறைஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
60 B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு - 10
தொலைபேசி: 0112-341580, 0112-341581
பக்ஸ் 0112-454608 E.mail-zme@slt.lk

(சி-1[illegible]7)

# வடக்கு கிழக்கு வீடமைப்பு
# மீள் நிர்மாணத்திட்டம்

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட திட்டக்கிராமம் என உங்கள் கிராமம் தெரிவு செய்யப்பட்டிருப்பின் பயன்நுகரியாகப் பின்வரும் அடிப்படை நிபந்தனைகளைப் பூர்த்தி செய் திருத்தல் வேண்டும்

1. *பிரதான உழைப்பாளியும் பெரும்பாலான குடும்ப அங்கத்தவர்களும் அக்கிராமத்தில் மீளக் குடியேறியிருத்தல் வேண்டும்.*
2. *அவர் வீட்டை கொண்டிருந்தவராகவும் அது முற்றாகவோ பகுதியாகவோ சேதமுற்றதாக இருத்தல் வேண்டும்.*
3. *அவரது காணி தொடர்பான ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆவணங்களைக் கொண்டிருக்க வேண்டும்.*
4. *ஐந்திற்குக் குறைவான குடும்ப உறுப்பினர்களுடைய குடும்ப மாத வருமானம் ரூபா 2500/=இற்கு குறைவாக இருக்கவேண்டும்.குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை ஐந்திற்கு மேற்பட்டிருப்பின் மாதாந்த தலா வருமானம் 500 /= ரூபாவுக்கு குறைவாக இருக்க வேண்டும்.*

தெரிவு செய்யப்பட்ட கிராமத்தவர்கள் அனைவருக்கும் வீட்டிழிவு சமூக நிலை ஆய்வுக்கான படிவம் வழங்கப்படும். பிரதேச செயலக தொழில்நுட்ப அலுவலர் தலைமையிலான குழு அவ் ஆய்வுப் படிவத்தின் பொருத்தமான பகுதிகளைப் பூர்த்தி செய்து தகவல்களைச் சேகரிக்கும்.

தொடர்ந்தும் விபரம் அறிய நாளைய பத்திரிகையை வாசியுங்கள்

(சி-13463)

# நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு

# வடக்கு கிழக்கு மாகாணசபை

# வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித்திட்டம் - II

# [நீகோட் II]

## நிதி- ஆசிய அபிவிருத்தி வங்கி

## ஆஅவ கடன் இல-2084- சிறீ [எஸ் எவ்]

# கேள்வி அறிவித்தல் - இல. 63

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித்திட்டம் (NECORD-II) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 25 வீதம் பண உதவியானது சுகாதார பராமரிப்பு போசனை ஊவாவெல்லஸ்ஸ அபிவிருத்தி அமைச்சில் இருந்து பெறப்படுகின்றது.

02. இதன் பின்னால் தொழில் தருனராக குறிப்பிடப்படும் necord திட்டக் கேள்விச்சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

அட்டவணை

| தொ. இல | ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் [ரூபா] |
|---|---|---|---|---|
| 01 | JF/NECORD-II/HS/02 | யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை ஐந்து மாடி விடுதிக்கட்டடத்தை முழுமையாக்குதல் | M3 கட்டடங்கள் | 1,046,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவர்கள்.

I நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக் காரராகப் பதிவு செய்யப் பட்டிருத்தல் வேண்டும்.

II இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச)உறுப்பினராக விளங்கவேண்டும்.

III கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன் ,மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV "ICTAD"வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V ஒப்பந்தக்காரர் மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்பத்திரத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது பேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை திட்டப்பணிப்பாளர் நீகோட் திட்டம் 55,கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி 026-2227414. பக்ஸ் :-026-2227491 இணையத்தள முகவரி www.necord.org ஈமெயில் necord @sltnet.lk)

06. கேள்வி ஆவணங்களை 05.12.2005 இல் இருந்து 19.12.2005 வரை காலை 9.30 இருந்து மாலை 3.00 மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 15000/= ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனிப்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும் கேள்வி கோருவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

08. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்ட கேள்விச்சபை, "நீகோட்" 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு 03.01.2006 மாலை 2.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்க வேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

09. முன்கூட்டியே கேள்விகோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 19.12.2005 ஆம் திகதி அன்று மாலை 2.30 மணிக்கு நடைபெறும்.

10. கேள்வியை தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்பிற்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

சி.ரங்கராஜா
தலைவர்,
ஆளுனரால் நியமிக்கப்பட்ட கேள்விச்சபை,
வடக்கு கிழக்கு மாகாண சபை,
திருகோணமலை.

(சி13482)

## நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாணசபை

## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித்திட்டம் - II

## (நீகோட் - II)

## நிதி- ஆசிய அபிவிருத்தி வங்கி

## ஆஅவ கடன் இல-2168 - சிறீ (எஸ் எவ்)

# கேள்வி அறிவித்தல் – இல. 62

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01 வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித்திட்டம் (NECORD-II) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (''ஆ.அ.வ'') கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02 இதன் பின்னால் தொழில் தருனராகக் குறிப்பிடப்படும் NECORDதிட்டக் கேள்விச்சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

### அட்டவணை

| தொ. இல | ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | NEP/NECORD-II/ID/01 | திருகோணமலை உப்புவெளி முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலைய மூன்று மாடி நிர்மாணம். | M4 கட்டடங்கள் | 260,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவர்கள்.

I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தர மொன்றில் ஒப்பந்தக் காரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச)உறுப்பினராக விளங்கவேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன்,மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. ஒப்பந்தக்காரர் மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை திட்டப்பணிப்பாளர் நீகோட்திட்டம் 55,கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி 026-2227434. /பக்ஸ் :-026-2227401 இணையத்தள முகவரி www.necord.org ஈமெயில் :necord @sltnet.lk)

06. கேள்வி ஆவணங்களை 25.11.2005 இல் இருந்து 12.12.2005 வரை காலை 9.30 இருந்து மாலை 3.00 மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 2000 = ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும் கேள்வி கோருவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

08. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்ட கேள்விச்சபை, "நீகோட்" 55, கந்தசுவாமி கோவில் வீதி, திரு கோணமலை என்ற விலாசமிடப்பட்டு 19.12.2005 காலை 11.30 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

09. முன்கூட்டியே கேள்விகோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 12.12.2005 ஆம் திகதி அன்று காலை 11.30 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்பிற்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக மாட்டார்.

**த.லங்காநேசன்,**
**தலைவர்,கேள்விச்சபை,**
**வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம்,**
**55,கந்தசுவாமி கோவில் வீதி,**
**திருகோணமலை.**

(சி-13483)

# சென்னையில் தொடரும் கன மழை முதலாவது டெஸ்ட் கைவிடப்பட்டது



இந்தியா சிறிலங்கா அணிகளுக்கிடையிலான சென்னை டெஸ்ட் போட்டி நேற்று மூன்றாவது நாளாகவும் கைவிடப்பட்டது.தொடர்ச்சியாகப் பெய்த கனமழை காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவிருந்த முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் இரண்டாவது நாட்கள் கைவிடப்பட்ட நிலையில் நேற்று மூன்றாம் நாள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.இந்த நிலையில் நேற்று இரவு இடையிடையே பெய்த மழை நேற்றைய ஆட்டத்தையும் பாதித்தது.

இதனால் சென்னை டெஸ்ட் போட்டி பெரும்பாலும் முற்றாகக் கைவிடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

# தென்னாபிரிக்காவின் இந்திய சுற்றுப்பயணம் வெற்றிகரமாக அமைந்தது



ஆர்தர்




சிமித்

இந்தியாவில் மேற்கொண்ட கிரிக்கெட் சுற்றுப்பயணம் வெற்றிகரமாக அமைந்ததாக தென்னாபிரிக்க கிரிக்கெட் அணித்தலைவர் கிரேம் சிமித் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடனான ஒருநாள் தொடர் வெற்றி தோல்வி இன்றி நிறைவடைந்தாலும் இதனை வெற்றிகரமான பயணமாகக் கொள்ள முடியுமென்றார். மூத்த வீரர்களான நிக்கிபோயே மற்றும் கிப்ஸ் இல்லாத நிலையிலும் தென்னாபிரிக்க அணி சிறப்பாகவே ஆடியுள்ளது.

எமது வீரர்களைப் பாராட்ட வேண்டும். அவர்கள் முதுகில் தட்டிக் கொடுக்க வேண்டும். அணியில் உள்ள இளம் வீரர்களின் திறமைகளைக் கண்டு கொள்ளவும் இந்திய சுற்றுப்பயணம் நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளதாக பயிற்சியாளர் மக்கி ஆர்தர் தெரிவித்தார். இந்திய சுற்றுப்பயணம் திருப்தியைத்தந்தது என்றாலும் ஓரளவு ஏமாற்றம் ஏற்பட்டதையும் மறக்க முடியாது. ஒரு நாள் தொடரில் 2-1 என்ற முன்னிலை பெற்ற போதும் 2-2 என்ற நிலையில் போட்டி சமனிலையில் முடிந்தது அதிருப்தியைத் தருகிறது. இருப்பினும் இந்தியாவில் இதுவரை விளையாடாத வீரர்களை அழைத்துச் சென்று இந்தளவிலாவது சமாளிக்க முடிந்ததில் மகிழ்ச்சியே என்றார் கிரேம்சிமித். இதேவேளை இந்தியாவுக்கு எதிரான ஐந்தாவது ஒருநாள் போட்டியில் கைவிரலில் காயமடைந்த சிமித் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.



பெண்கள் தனிநபர் பிரிவில் இறுதிச்சுற்றுக்கு முன்னேறிய சீன வீராங்கனை ஐங்நன். இவரின் சாகசங்களைத்தான் இங்கே நீங்கள் பாக்கிறீர்கள்.

# உலகக் கிண்ண கால்பந்து போட்டித் தொடர் ஜேர்மனிக்கு பொருளாதாரத்தில் முன்னேற்றம்



2006ஆம் ஆண்டு உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகளை ஜேர்மன் நடத்துவது அந்நாட்டுக்கு பொருளாதார வளர்ச்சியில் சிறு முன்னேற்றம் ஏற்படலாம் என அந்நாட்டு வங்கி வெளியிட்ட தகவல்களில் தெரியவருகிறது.

கடந்த செப்ரெம்பர் மாதம் புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர் உள்நாட்டு உற்பத்தி அடுத்த ஆண்டு 1.7 வீதம் அதிகரிக்கும் என்பதுடன் உதைபந்தாட்டப் போட்டிகளைக் கண்டுகளிக்கப் பெருமளவான வெளிநாட்டவர் வரவிருப்பதால் அதன் மூலம் பூச்சியம் தசம் மூன்றுவீதம் பொருளாதார வளர்ச்சியேற்படலாமென மேற்படி வங்கி அறிவித்துள்ளது. வரும் 2006 ஜுன் மாதம் ஒன்பதாம்திகதிமுதல் ஜுலை ஒன்பதாம் திகதிவரை 32 நாடுகளைச் சேர்ந்த அணிகள் 64 போட்டிகளில் கலந்துகொள்கின்றன.

வெளிநாட்டவர் அங்கு வருவதால் பல விளையாட்டுப் பொருட்களை உற்பத்திசெய்யும் நிறுவனங்கள் விற்பனை மூலம் அதிகளவு இலாபம் ஈட்டும் என மேற்படி வங்கி தெரிவித்துள்ளது. அத்துடன் போட்டிகளை ஒளிபரப்புச் செய்யும் உரிமைகளை வழங்குவதால் அதன் மூலமும் பெருமளவு நிதி அரசுக்குக் கிடைக்கலாம்.

## உதைபந்து மத்தியஸ்தர் பரீட்சை: விதிகள், பயிற்சி கருத்தரங்கு

எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கும், மற்றும் கழகங்களின் உதைபந்தாட்ட அணி முகாமையாளர்கள், பயிற்றுனர்கள் பாடசாலை உதைபந்தாட்ட அணிப்பொறுப்பாசிரியர்களுக்குமான "உதை பந்தாட்ட விதிகள்" பயிற்சிக்கருத்தரங்கு எதிர்வரும் 10ஆம்,11ஆம் திகதிகளில் காலை ஒன்பது மணி தொடக்கம் 5.00 மணிவரை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறும். பங்குபற்ற விரும்புவோர் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் பெயர்களைப் திவு செய்யும்படி இளையோர் செயற்பாட்டு நிறுவன செயலர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(C11)

# ரஞ்சி கோப்பை கிரிக்கெட்; ஜடேஜா அசத்தலான ஆட்டம்

ரஞ்சி கோப்பை போட்டியில் ஜடேஜா 161 ஓட்டம் விளாச,ராஜஸ்தான் அணி இமாலய ஓட்ட எண்ணிக்கையை எட்டியது.

ஜெய்ப்பூரில் ராஜஸ்தான்,ஜார்க்கண்ட் அணிகள் மோதும் ரஞ்சி கோப்பை கிரிக்கெட் 'பி' பிரிவு போட்டி நடக்கிறது. கடந்த வெள்ளிக்கிழமை அன்று இரண்டாம் நாள் ஆட்டம் நடந்தது.முன்னாள் இந்திய அணி வீர் ஜடேஜா ராஜஸ்தான் அணிக்காக விளையாடுகிறார். ககன் கோடா சதம் (146) அடித்த பின் ராஜஸ்தான் அணி தடுமாறியது. இந்த நேரத்தில் சிறப்பாக ஆடிய ஜடேஜா சதம் (161) அடித்து அணியை மீட்டார். முதல் இனிங்சில் ராஜஸ்தான் 587ஓட்டம் குவித்தது. அடுத்து களமிறங்கிய ஜார்க்கண்ட் அணி ஆட்ட நேர முடிவில் முதல் இனிங்சில் ஒரு விக்கெட்டுக்கு 37 ஓட்டம் எடுத்திருந்தது.




# இங்கிலாந்து உதைபந்தாட்ட ச. தலைவராக இளவரசர் வில்லியம்ஸ் நியமனம் பெறுகின்றார்



வரும் 2006 ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகள் ஆரம்பமாகவிருக்கும் நிலையில் இங்கிலாந்து உதைபந்தாட்ட சங்கத் தலைவராக அந்நாட்டு இளவரசரான வில்லியம்ஸ் நியமிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதும் அப்பதவியில் இருப்பவர் அரச வம்சத்தைச் சேர்ந்தவரான வில்லியம்சின் சிறிய தகப்பனாரான அன்ரூஆவார். எவ்வாறாயினும் வரும் மே 13ஆம் திகதி வெம்பிளி மைதானத்தில் நடை பெறும் உதைபந்தாட்டச் சங்க சம்பியன் தொடரின் இறுதிப்போட்டியன்று வில்லியம்ஸ் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

வில்லியம்ஸ் சிறந்த உதைபந்தாட்ட ரசிகரும் விளையாட்டு வீருமாவார்.




தொடர்ந்து பெய்த கனமழையால் சென்னை டெஸ்ட் போட்டி இரண்டாவது நாள் தடைப்பட்டபோதும் மைதானத்துக்கு ரசிகர்களின் வருகை குறைவடையாத நிலையில் ரசிகர்களின் வருகையை வியந்தபடி மைதானத்தைவிட்டு வெளியேறும் சச்சினும், முரளிதரனும்.

# ஊக்கமருந்து பாவித்தார் லித்வேனிய வீரருக்கு தடை

தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து பாவித்தமைக்கான குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள லித்வேனியாவின் துவிச்சக்கரவண்டிச் சவாரி வீரர் றேமன்டாஸ் ரம்சாஸ் எட்டு மாதங்களுக்கு போட்டிகளில் பங்கேற்கத் தடைவிதிக்கப்பட்டுள்ளார்.

33 வயதாகும் அவர் 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற பிரான்ஸ் துவிச்சக்கர வண்டி சவாரிப்போட்டியில் மூன்றாவது இடத்தைப்பெற்றார்.

எனினும் 2003 ஆம் ஆண்டு போட்டியின்போது இவரைப் பரிசோதித்த வைத்தியர் குழு இவர் ஊக்க மருந்து பாவித்திருந்தமையை உறுதி செய்தனர். எனினும் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவந்ததில் குற்றம் உறுதிசெய்யப்பட்டு தற்போது அவருக்கு போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# மீண்டும் மார்ட்டினா கிங்கிஸ்

மூன்று முறை அவுஸ்திரேலியப் பெண்கள் ஒற்றையர் ஓபன் டென்னிசில் வெற்றி பெற்ற சுவிட்சர்லாந்து வீராங்கனையான மார்ட்டினா கிங்கிஸ் மீண்டும் போட்டிகளில் பங்கேற்கவுள்ளார்.

அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிசில் பங்கேற்க அவருக்கு வாய்ப்பை ஏற்படுத்தித்தர அதிகாரிகள் முயன்று வருகின்றனர்.

கிங்கிஸ் தொடர்ந்து காயங்களால் அவதிப்பட்டதால் 2002 ஆம் ஆண்டின் பின் ஓய்வில் ன்ற அவர் மீண்டும் போட்டிகளுக்குத் திரும்ப எண்ணியுள்ளார்.

இது தொடர்பாக டென்னிஸ்போட்டி அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கும் போது கிங் ் மீண்டும் களத்துக்குத் திரும்புவது தனது நாட்டுக்குப் பெருமையையும் முன்னேற்றத்தையும் தருவதாகத் தெரிவித்துள்ளார். அவரது முகாமையாளர் தெரிவிக்கும்போது கிங்கிஸ் மீண்டும் போட்டிகளில் பங்கேற்பது தனது திறமையை வெளிக்காட்டவேயன்றி தரவரிசையில் முன்னுக்கு வரவோ சம்பியன் பட்டம் வெல்லவோ அல்ல என்று கூறியுள்ளார்.



அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹோவர்ட் தீவிர கிரிக்கெட் ரசிகர். பூகம்பம் தாக்கிய பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியை பார்வையிடச் சென்ற இவர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை... பாகிஸ்தான் அவுஸ்திரேலிய இராணுவ வீரர்களுடன் ஜாலியாகக் கிரிக்கெட் விளையாட தொடங்கி விட்டார். அவுஸ்திரேலிய படை வீரர்கள் பூகம்ப நிவாரண உதவி செய்வதற்காக பாகிஸ்தான் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிந்தனைக்கு



எதிரியை விட துரோகிகளே ஆபத்தானவர்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 05.12.2005



தொலைபேசி / தொலைநகல் 060-2213244 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## அமுல் செய்தால் போதும்!

இனப்பிரச்சினை தொடர்பாக சிறிலங்கா ஆட்சியாளர்கள் அடிக்கடி கூறும் விடயத்தில் ஒன்று போர் நிறுத்த உடன்பாடு மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும் என்பதாகும். ஆனால் இவ்விடயம் இன்றைய நிலையில் விடுதலைப்புலிகளினால் பரிசீலிக்கப்படும் நிலையில் இல்லை.

போர் நிறுத்த உடன்பாட்டில் உள்ள குறைபாடே தற்போது வன்முறைகள் அதிகரிப்பதற்கும், சமாதான முயற்சிகள் முன்னேற்றம் அடையாமைக்கும் காரணம் என அரசாங்கத் தரப்பு கூறுவதுண்டு. வேறுவிதமாகக் கூறுவதானால் இவ் உடன்பாடு விடுதலைப்புலிகளுக்குச் சாதகமான அம்சங்களைக் கொண்டுள்ளது என்பதே பௌத்த- சிங்களப் பேரினவாத சக்திகளின் குற்றச் சாட்டாகும்.

ஆனால் போர் நிறுத்த உடன்பாட்டில் அவ்வாறு எதுவும் புலிகளுக்குச் சாதகமானதாக இல்லை. போர் நிறுத்த உடன்பாட்டின் இலக்கு எதுவோ அதற்கு ஏற்றதாகவே போர் நிறுத்த உடன்பாட்டு விதிகள் உள்ளன. குறிப்பாக இயல்பு வாழ்வை ஏற்படுத்தும் நோக்கத்துடனான போர் நிறுத்த உடன்பாட்டில் அதற்கான விதிகள் முக்கியமானவையாகவுள்ளன.

வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவது என்பதில்- சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படுதல் என்பது அவசியமானதாகும். அத்தகையதொரு சூழ்நிலை உருவாக்கப்படாத பட்சத்தில் இயல்பு வாழ்க்கை என்பது சாத்தியப்பாடானதாக இருக்கப்போவதில்லை என்பது ஏற்கனவே உணரப்பட்ட தொன்றாகும்.

ஏனெனில் இக்குழுக்கள் தொடர்ச்சியான மக்கள் விரோத நடவடிக்கைகளிலும், விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் ஈடுபடுகையில் எவ்வாறு இயல்பு வாழ்க்கை என்பது சாத்தியமானதாகும்? அதாவது மோதலில் ஈடுபட்ட இரு தரப்பினரான புலிகளும், இராணுவத் தரப்பினரும் மோதலைத் தவிர்த்துக் கொண்டாலும், மூன்றாம் தரப்பாகவுள்ள இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கும் துணைப்படையினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது யுத்த நிறுத்தத்தின் இலக்கு எவ்வாறு எட்டப்படும்?

அதிலும் குறிப்பாக இத்துணைப்படையினரை விடுதலைப் புலிகளுக்கு எதிரான வன்முறைக்கு இராணுவத்தரப்பு பயன்படுத்துகையில் எவ்வாறு இயல்பு வாழ்க்கை திரும்ப முடியும்?. ஆனால் இத்தகையதொரு நிலை உருவாகலாமென உணரப் பட்டதே விளைவே துணைப்படையினரின் ஆயுதங்கள் களையப் படவேண்டும் என்ற விதி யுத்த நிறுத்த உடன்பாட்டில் சேர்த்துக்கொள்ளப்படக் காரணமாகியது. ஆனால் இதனைச் சிறிலங்கா அரசாங்கம் அமுல் செய்யவில்லை.

இதன் விளைவே, இன்று வடக்கு- கிழக்கில் இடம் பெற்று வரும் வன்முறைகளாகும். இத்தகைய நிகழ்வுகளைத் தவிர்க்கவே இராணுவத் துணைக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் எனப் பல தடவை விடுதலைப்புலிகள் சுட்டிக்காட்டியும், கோரிக்கை விடுத்தும் வந்தனர். ஆயினும் அரசு அதனைப் பொருட்படுத்தியதாக இல்லை.

மாறாக சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறை தொடர்ந்தும் துணை இராணுவக் குழுக்களைப் பயன்படுத்துவதில் முனைப்புக் காட்டியே வந்துள்ளது/ வருகின்றது. இதே சமயம் யுத்த நிறுத்தத்தை உரிய முறையில் அமுல்படுத்தாத அரசாங்கத்தரப்போ யுத்த நிறுத்த உடன்பாட்டில் ஏதோ தவறு உள்ளது போன்றும், அதனை மீள் பரிசீலனை செய்து புதிய உடன்பாடு செய்யப்படவேண்டும் எனவும் கூறி வருகின்றது.

ஆனால் யுத்த நிறுத்த உடன்பாட்டில் மீளாய்வோ, திருத்தமோ செய்யப்படுவதற்கு இல்லை. ஏனெனில் அரசாங்கத் தரப்பு கூறுவது போன்று உடன்பாட்டில் மாற்றம் செய்வதென்பது ஒரு தரப்பு தீர்மானத்தின் பாற்பட்டதல்ல. ஆகையினால் அரசாங்கம் விரும்பினால் மட்டும் அது சாத்தியப்பாடானதல்ல. இரண்டாவதாக இவ் யுத்த நிறுத்த உடன்பாடானது தற்பொழுது இரு தரப்பு உடன்பாடு என்ற நிலைக்கப்பால், சர்வதேச உடன்பாடு என்ற அளவிற்கு முக்கியத்துவம் பெற்றதாகியுள்ளது. ஆகையினால் இலகுவில் இதனை மாற்றிக்கொள்வதென்பது சாத்தியப்பாடற்றதாகும்.

ஆகையினால் அரசாங்கம் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை மீள் பரிசீலனை செய்யும் திட்டத்தைக் கைவிட்டு யுத்த நிறுத்த உடன்பாட்டைச் சீராக அமுல் செய்வதில் அக்கறை காட்டுதல் வேண்டும். அவ்வாறு அமுல் செய்யப்படும் பட்சத்தில் யுத்த நிறுத்த உடன்பாடு மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையே தேவையற்றதாகி விடும். மக்களின் இயல்பு வாழ்க்கையும் முன்னேற்றம் காணும்.

மாறாக யுத்த நிறுத்த உடன்பாடு மீள் பரிசீலனை செய்யப்பட்டே ஆக வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் சிறிலங்கா அரசாங்கம் செயற்படுமேயானால் அதில் அதனால் வெற்றி பெற முடியாது. அது மட்டுமல்லாது அரசாங்கம் தனது வழியிலேயே செல்லப்போவதாகத் தீர்மானிக்குமானால் அது யுத்த நிறுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீர்மானித்து விட்டதாகவே கொள்ள வே[illegible]யிருக்கும்.

## கூட்டாட்சி சித்தாந்தத்தையே அரசு மறுத்தால் எவ்வாறு திறந்த மனதுடன் பேச முடியும்?

### - தமிழகத்திலிருந்து வெளியாகும் "தினமணி" கேள்வி

(சென்னை)

இலங்கையில் கூட்டாட்சி அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டுமென்ற சித்தாந்தத்தையே புதிய ஆட்சியாளர் ஏற்க மறுத்துவருவதால், எப்படி திறந்த மனதுடன், பரஸ்பர நம்பிக்கையுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என தமிழகத்திலிருந்து வெளிவரும் தினமணி பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெளியான தினமணி பத்திரிகையில் ஈழப்பிரச்சினையில் இந்தியாவின் பொறுப்பு என்ற தலைப்பில்இந்த ஆசிரிய தலையங்கம் எழுதப்பட்டுள்ளது.

டில்லிக்கு வந்து பிரதமரை சந்தித்துப்பேசிய இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிடம் இலங்கையில் போர் நிறுத்தம் நீடிக்க வேண்டிய அவசியத்தை மன்மோகன் சிங் வலியுறுத்தியிருக்கின்றார். அதேசமயத்தில் "போர் நிறுத்த உடன்படிக்கையை மதித்து நடப்பதென புதிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதி பூண்டிருப்பதாகவும்" மங்கள சமரவீர தெரிவித்திருக்கின்றார்.

அதற்கு முன் மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் இ.அகமதுவைச் சந்தித்து கலந்துரையாடிய அவர் "ஈழப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காண்பதற்காக பேச்சுவார்த்தை நடத்த முன்வருமாறு" விடுதலைப்புலிகளுக்கு சனாதிபதி அழைப்பு விடுத்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார். அப்பேச்சுவார்த்தைகள் திறந்த மனதுடன் ஒளிவு மறைவுக்கு இடமில்லாமல் நடைபெறவேண்டும் என்று சனாதிபதி விரும்புவதாகவும் அப்படி நடந்தால் மட்டுமே அதில் எட்டக்கூடிய உடன்பாடுகளை நாடே ஏற்றுக்கொள்ளுமாறு செய்ய முடியும் என்பதும் சனாதிபதியினுடைய கருத்து என்றும் மங்கள சமரவீர விளக்கியிருக்கின்றார்.

ஆனால் ஈழப்பிரச்சினையின் நிரந்தரத்தீர்வுக்கு இந்த அணுகுமுறை போதுமானதாக தோன்றவில்லை. போர் நிறுத்தம் நான்காண்டுகளாக நடைமுறையில் இருந்துவருகிறது. இச் சூழ்நிலையில் ஈழப்பிரச்சினைக்குத் தீர்வுக்கான திசையில் ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றதா என்றால் இல்லையென்றே பதிலளிக்க வேண்டியிருக்கிறது. இதற்கு முதன்மையான காரணம் தீர்வுக்கான திட்டத்துக்கு சிங்களவரிடையே செல்வாக்குப் பெற்றுள்ள சந்திரிகாவின் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும்- எதிர்க்கட்சியான ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக்கட்சியும் எக்காலத்திலும் ஒருவரும் ஆதரவு காட்ட முன்வராததேயாகும்.

இதற்கு அடிப்படைக் காரணம்- ஈழத்தமிழர்களுடைய கோரிக்கையின் அடிப்படையையே புதிய ஆளும் கட்சி அங்கீகரிக்க மறுப்பது தான் "கூட்டாட்சி" அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டுமென்ற சித்தாந்தத்தையே புதிய ஆட்சியாளர்கள் ஏற்க மறுத்து வருகிறார்கள்.பின்பு எப்படி திறந்த மனதுடன் பரஸ்பர நம்பிக்கையுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வாய்ப்பிருக்க முடியும்?

ஈழப்பிரச்சினையில் சர்வ கட்சிகளின் ஒத்துழைப்புடன் வாஜ்பாய் அரசு கடைப்பிடித்த தேசியக் கொள்கையையே மன்மோகன்சிங் அரசும் பின்பற்றுவதாக பாராளுமன்றத்தில் சில காலத்துக்கு முன் அறிவிக்கப்பட்டது.இக்கொள்கை நான்கு அம்சங்களைக்கொண்டது. அதில் முக்கியமான அம்சம்என்ன வெனில்ஒன்றுபட்ட இலங்கைக்குள் கூட்டாட்சிக் கட்டமைப்பு ஆட்சி முறை மூலம் ஈழப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணப்பட வேண்டும் என்பதாகும்.

அதிலும் குறிப்பாக 2003 ஒக்ரோபரில் டில்லியில் வாஜ்பாயும் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் வெளியிட்ட கூட்டறிக்கையிலும் இந்த அம்சம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

"இலங்கையின் ஒற்றுமைக்கு ஊறு ஏற்படாத வகையில் தீர்வு அமைந்திருப்பது எவ்வளவு அவசியமோ அந்த அளவுக்கு கூட்டாட்சிக் கட்டமைப்பு ஆட்சி முறையும் பிரச்சினையின் தீர்வுக்கு அத்தியாவசியம் என்றவா[illegible] அக் கூட்டறிக்கையில் எடுப்பாக இடம்பெற்றிருந்தது. ஆனால் இப்பொழுதோ அந்த அடிப்படைக் கொள்கையையே ஏற்க மறுக்கும் அரசு-இந்தியாவுடன் பொருளாதார உடன்படிக்கை காண விரும்புகின்றது.

இக்கூட்டத்தில் "கூட்டாட்சி அடிப்படையிலேயே தீர்வு" என்ற அடிப்படைக் கொள்கையை மகிந்த ராஜபக்ஷ அரசிடம் வலியுறுத்திக் கூற இந்திய அரசு தயங்கக்கூடாது. ஏனெனில் ஈழப்பிரச்சினை முப்பது இலட்சம் தமிழர்களின் வாழ்வுரிமை,சமத்துவக்குடியுரிமை, காலாச்சார பாதுகாப்புரிமை சம்பந்தமானது. இப்பிரச்சினையில் தாய்த்தமிழகத்தின் ஆறு கோடி தமிழர்கள் ஆழ்ந்த கவலை கொண்டிருக்கிறார்கள் என்பதை மன்மோகன்சிங் அரசு மறந்துவிடக்கூடாது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை பிரச்சினையில் இந்தியா நுழைவது சமாதானப் பேச்சுக்களை தடம் புரள வைக்கும்

### - மறுமலர்ச்சி தி.மு.க. தலைவர் வைகோ

(சென்னை)

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில் இந்தியாவை சம்பந்தப்படுத்தப்போவதாக இலங்கையின் சனாதிபதி தெரிவித்துள்ளமையானது, சமாதானப் பேச்சுவார்த்தையை தடம் புரள மேற்கொள்ளும் நடவடிக்கையாகுமென தமிழ்நாடு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வைகோ இந்தக் குற்றச் சாட்டை சுமத்தியுள்ளார்.

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் யோசனையானது, தமிழ் மக்களுக்கு நீதியை வழங்கப்போவதில்லை. அதற்குப் பதிலாக சமாதானத்திற்கான வழிமுறைகளை மூடிவிடுவதாகும் எனவே இந்தியா இந்த விடயத்தில் மீண்டும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளக்கூடாது.

எனினும் இந்தியா தற்சமயம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஏற்பாட்டாளராக செயற்படும் நோர்வேயின் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க வேண்டுமென வைகோ கேட்டுக் கொண்டார்.1987 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ராஜீவ் காந்தி- ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை சுட்டிக்காட்டியுள்ள அவர், இதன் மூலம் பாரிய அழிவுகள் ஏற்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் போது, தமிழ் பிரதேசங்கள் அரசாங்கத்தின் நிதியில் இயங்கும் குடியேற்றங்கள் என்ற கருத்தை வெளிப்படுத்தியதா[illegible] குறிப்பிட்டுள்ள வைகோ.இது குறித்து தாம் இந்தியப் பிரதமர் மற்றும் பாதுகாப்பமைச்சர் ஆகியோருக்கு விளக்கமளிக்கப்போவதாக கூறியுள்ளார்.(32)

## ஐ.தே.க. சீரமைப்பு மனு இவ்வாரத்தில் ரணிலிடம் கையளிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியை சீரமைப்பது குறித்து விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்திக் குழுவினர், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை வேண்டியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 25பாராளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்ட மனு இந்த வாரத்தில் எதிர்க்கட்சித் தலைவரிடம் கையளிக்கப்படும் என தெரிய வருகிறது.

அதிருப்தியாளர் குழுவில், பாராளுமன்ற உறுப்பினர்களான காமினி லொக்குகே, ராஜித சேனாரத்ன, மகிந்த விஜயசேகர, ஜீ.எல். பீரிஸ், எம்.எச். மொகமட், பீ. தயாரத்ன, மனோ விஜயரட்ண, தர்மதாச பண்டா, ரஞ்சித் மத்தும பண்டார, நியோமால் பெரேரா மற்றும் சுதந்த புஞ்சி நிலமே ஆகியோரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க அதிருப்தியாளர் குழுவில் இடம் பெறவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரவு- செலவுத்திட்டத்தின் பின் அமைச்சரவையில் பாரிய மாற்றம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் வரவு- செலவுத் திட்டத்தின் பின்னர் அமைச்சரவையில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.இதனடிப்படையில் தற்சமயம் தற்காலிக அமைச்சரவையே பதவியில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.அமைச்சரவையின் உறுப்பினர்கள் பலருக்கு தற்போதைய தமது நியமனங்களில் திருப்தியற்ற நிலை ஏற்பட்டுள்ளது.அத்துடன் கடந்த சனாதிபதித் தேர்தலின் போது தமக்கு எதிராக செயற்பட்ட கட்சிகள் சிலவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்களையும் உள்வாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.இந்தநிலையிலேயே வரவு- செலவுத்திட்டத்தின் பின்னர் அமைச்சரவை மாற்றம் குறித்து எதிர்வு கூறப்பட்டுள்ளது.(32)

# யாழ்.தாக்குதல் சம்பவங்கள் கவலையை உண்டாக்கியுள்ளது

## -போர்நிறுத்த கண்காணிப்புக்குழு பேச்சாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் மிகவும் கவலையை உண்டாக்கியிருப்பதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலப்ஸ் டோட்டில் தெரிவித்துள்ளார்.

மூன்றரை வருடகால யுத்த நிறுத்த கண்காணிப்பு வரலாற்றில் இடம்பெற்ற முதலாவது மிக மோசமான சம்பவம் இதுவாகும்.

இது குறித்து அரச தரப்புடனும், விடுதலைப் புலிகளுடனும் ஏனைய சமூகத் தலைவர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளோம்.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர களத்தில் உள்ள கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் கடுமையாக உழைத்து வருகின்றனர் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையில் தொடரும் வன்முறைகள் அபாய நிலையை உருவாக்கி வருகின்றன என்று இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

போர் நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வடக்கு-கிழக்கில் கடந்த சில நாட்களாக நடைபெற்று வரும் வன்முறைகளில் பொதுமக்களும் படையினரும் காயமடைந்தும் கொல்லப்பட்டும் உள்ளனர். இந்த வன்முறைகள் அபாயகரமான சூழலை ஏற்படுத்துகின்றன.

இங்கு எண்ணிக்கையற்ற தாக்குதல்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. இந்த இடையூறுகளும் தாக்குதல்களும் அதிகரித்தால் பாதுகாப்பு நிலைமைகள் சீர்செய்ய முடியாத அளவிற்கு படிப்படியாக சீர்குலைந்துவிடும். பாதிக்கப்பட்ட பகுதிகளின் இயல்பு வாழ்க்கையை மீளக் கொண்டு வருவதில் பாரிய தடை ஏற்படும்.

சிறிலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இந்த வன்முறைகள் நீடிக்காத வகையில் ஆகக் கூடியவரை இந்த நிலைமைகளை மாற்ற வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறோம் என்று தெரிவித்துள்ளார். (32)

# இனப்பிரச்சினை அனுசரணையாளராக சீனாவை ஈடுபடுத்த முயற்சி

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கான அனுசரணையாளராக சீனாவை ஈடுபட வைக்க ஜே.வி.பி.யும் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் முயற்சிப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினையில் இந்தியா ஏற்கனவே தலையிட்டுள்ளது. இந்திய அமைதிப் படையும் இங்கே வந்துள்ளது. இந்தியா இப்போது நேரடியாக தலையிடாது. ஆனால் நோர்வேயை ஆதரிக்கும்.

அதே நேரத்தில் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, ஜே.வி.பி. ஆகியோர் சீனாவை அனுசரணையாளராக அழைக்க முயற்சிக்கின்றார்கள்.

சீன ஆதரவாளர்களாக மங்கள சமரவீரவும் ஜே.வி.பியினரும் உள்ளனர். அம்பாந்தோட்டை துறைமுக மேம்பாட்டுக்காக சீனாவை அவர்கள் அழைத்துள்ளனர். சீனாவை அவர்கள் அழைத்தால் இங்கு மோசமான விளைவுகள் ஏற்படும்.

சிங்கள பேரினவாதிகளாகவும் தமிழர்களுக்கு எதிராகவும் பேசி வருகிற கொட்டகதெனிய, இராணுவத் தளபதி சரத்பொன்சேகா போன்ற கடும்போக்காளர்களை அரசாங்கப் பொறுப்புக்களில் மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார். போருக்கு அரசாங்கம் தயாரானால் அது தலைவர் பிரபாகரனின் தவறுஅல்ல. விடுதலைப் புலிகளைப் பேச்சுக்கு அழைப்பதாகக் கூறுவது எளிது. ஆனால் எந்த அடிப்படையில் மகிந்த ராஜபக்ஷ பேசப்போகிறார்? என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

# மூதூரில் நிலைமையை சுமுகமாக்க சந்திப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன

## -திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர்

திருகோணமலை மூதூர் சம்பவங்களானது தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் முறுகலை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார். நிலைமையை சுமுகமாக்குவதற்கு இரண்டு தரப்பினருக்குமிடையில் சந்திப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தோப்பூர் இணைப்பாளர் காஜா முனைகீன் மீது நேற்று முன்தினம் துப்பாக்கி சூடு நடத்தப்பட்ட பின்னர் பள்ளிக் குடியிருப்பு பகுதியில் இருந்து வந்த தமிழர்கள் இருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டனர்.

இதில் 15 வயதுச் சிறுவனும் அடங்குகிறார். இதனையடுத்து இறால்குழி என்ற இடத்தில் வைத்து மூன்று முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டனர். இவர்கள் வியாபார நோக்கங்களுக்காக சென்று திரும்பியவர்கள் எனக் கூறப்படுகிறது. (32)

### மூன்று....

இராணுவ உழவியந்திரம் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகம் மற்றும் தாக்குதல்களிலேயே இவர்கள் காயமடைந்துள்ளனர்.

### குடாநாட்டில்...

லேயே உயிரிழந்ததுடன் நான்கு பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்த நால்வரும் இராணுவ வாகனம் ஒன்றின் மூலம் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தோர் கூறினர்.

பலாலி வீதியில் கோண்டாவில் சந்திக்கு சமீபமாக உள்ள மரம் ஒன்றில் பொருத்திவைக்கப்பட்ட கிளைமோர் மூலமாகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்று கூறப்படுகிறது. மூன்று கிளைமோர் வைக்கப்பட்டிருந்ததாகவும் அதில் இரண்டு கிளைமோர் வெடித்ததாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. படுகாயமடைந்த சிப்பாய் ஒருவர் பலாலி வைத்தியசாலையில் இருந்து விமானம் மூலம் கொழும்புக்கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

**நுணாவிலில் துப்பாக்கிச் சூடு:**

யாழ்.தென்மராட்சி நுணாவிலில் உள்ள பெருங்குளம் பகுதியில் காவல்கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று மாலை 6.00 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தைத்தொடர்ந்து அங்கு பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதேவேளை சுன்னாகியடியில் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்டதாக்குதலில் ஒருவர் பலியாகியுள்ளார்.

**நீர்வேலி'யில் மினிமுகாம் மீது தாக்கு:**

யாழ் நீர்வேலியில் சிறிலங்கா இராணுவத்தினரின் மினிமுகாம் மீது நேற்று மாலை 6.10 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலில் இரு சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இருதரப்புக்கும் இடையில் நீண்ட நேரம் துப்பாக்கிச் சூடு நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

**2 முகாம்கள் மீது துப்பாக்கிச் சூடு:**

யாழ். முத்திரைச்சந்தி மற்றும் இருபாலைச்சந்தி என்பவற்றில் உள்ள இருவேறு இராணுவ முகாம்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

பகல் 1.00 மணியளவில் இருபாலைச் சந்தியில் உள்ள இராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இரு சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர்.

இது போல் முத்திரைச்சந்தியில் உள்ள இராணுவ மினிமுகாம் ஒன்றின் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது. இதில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார். காயமடைந்தோர் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (28,33)

# மாலுசந்தியில் காயமடைந்த படையினர் இருவர் மரணம்

(வடமராட்சி)

வடமராட்சி மாலுசந்திப் பகுதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்திருந்த மூன்று படையினரில் இருவர் நேற்று மரணமாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 6.10 மணியளவில் மாலுசந்திப் பகுதியில் உள்ள ரெலிக்கொம் பரிவர்த்தனை நிலையத்துக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த படையினர் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் காயமடைந்த இரு படையினர் சிகிச்சை பலனளிக்காமல் நேற்று மரணமடைந்தனர்.

# காயமடைந்த பிரதேச செயலர் சிகிச்சை பயனின்றி மரணம்

(கொழும்பு)

கடமையில் ஈடுபட்டிருந்த வேளை இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி படுகாயமடைந்திருந்த காத்தான் குடி பிரதேச செயலர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை காத்தான் குடியில் வைத்து இனந்தெரியாதவர்களால் சுடப்பட்ட காத்தான்குடி பிரதேச செயலர் ஏ. எல். எம். பளீல் படுகாயமடைந்திருந்தார்.

படுகாயமடைந்த இவர் சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு அப்பலோ வைத்தியசாலைக்குக்கொண்டு செல்லப்பட்டிருந்தார். அங்கு சிகிச்சைகள் பயனின்றி அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

# தாக்குதல் நடந்த இடத்தை கண்காணிப்புக்குழு பார்வை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தினை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் அப்பகுதிக்குச் சென்ற கண்காணிப்புக்குழுவினர் அங்கு நிலைமைகளை அவதானித்தனர். இதேவேளை அப்பகுதிக்குச் சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர் ரோகிதவைப் படையினர் அவ்விடத்திற்குச் செல்ல அனுமதிக்கவில்லை. (41)

# திருமலையில் ஐந்து தமிழர்களை காணவில்லையென முறைப்பாடு

(திருமலை)

திருகோணமலையில் ஐந்து தமிழர்கள் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் சம்பூரில் இருந்து தோப்பூருக்குச் சென்ற இரண்டு தமிழர்களும் மணற்சேனையில் இருந்து மூதூருக்குச் சென்ற ஒரு தமிழர் உட்பட ஐந்து பேர் இதுவரை வீடு திரும்பவில்லை என அவர்களது உறவினர்கள் அறிவித்துள்ளனர்.

மணற்சேனையில் இருந்து மூதூருக்குச் சென்ற யோகராசா ரவீந்திரன் (வயது 22), சம்பூரில் இருந்து தோப்பூருக்குச்சென்ற சந்திரசேகரம் கிருஸ்ணகுமார் மற்றும் பூலோகராசன் இந்திரகுமார் ஆகியோர் உட்பட ஐவரே காணாமற் போயுள்ளனர்.

### கோண்டாவில்...

வில் சந்திக்கு அருகாக வைத்தே இடம்பெற்றதால் பலாலி வீதியூடான போக்குவரத்தை தடை செய்த படையினர் திருநெல்வேலிச் சந்தியிலும் கோண்டாவில் சந்தியிலும் நின்றவாறு வீதியால் பயணிப்போரை தாக்கி திருப்பி அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அத்துடன் நீர்வேலியிலும் இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டது. (28, 33, 41)

### இருஇளைஞர்...

விடுதலைப் புலிகள்தான் கண்டிப்பாக இதைச் செய்துள்ளனர். கடந்த 48 மணிநேரத்தில் தொடர்ச்சியாக தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அண்மையில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டதற்கு பழிவாங்கும் வகையில் இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கக் கூடும் என்றார் அவர்.

### இராணுவத்தி..

தாக்குதல்கள் நடத்தப்படுகின்ற பொழுது அந்தப் பகுதியில் வரும் மக்கள் இராணுவத்தினரால் மறிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு தாக்கப்படுகின்ற சம்பவங்கள் இருக்கின்றன.

யாழ். குடாநாட்டில் அண்மையில் பத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினாலும், அவர்களுடைய குண்டாந்தடிகளாலும் தாக்கப்பட்டு காயமடைந்திருக்கின்றார்கள். சிலர் இன்றும் அச்சத்தின் காரணத்தினால் வைத்தியசாலைக்குப் போகாமல் இருக்கின்றார்கள். எனவே இவ்வாறான சம்பவங்கள் தொடருமேயானால் இன்னுமின்னும் மக்கள் கொதித்தெழுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் ஏற்படக் கூடாதென நாங்களும் எங்களுடைய மக்களும் விரும்புகின்றோம். எந்தவொரு உயிரும் இழக்கப்படாமல் ஓர் இயல்பான சூழ் நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய எதிர் பார்ப்பு.

ஆனால், அவ்வாறானதொரு சூழ்நிலையை படையும், அரச தரப்பும் ஏற்படுத்துமா? என்ற கேள்வி இன்றைய நிலையில் எழுந்திருக்கின்றது என அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.